# ஜாமக்காரன்
# JAMAKKARAN

ஜாமக்காரன் JAMAKKARAN

VOLUME - 2 Reg NO.TNBIL/2016/70171 ISSUE - 12

DECEMBER 2018 TAMIL & MALAYALAM

ANNUAL SUBSCRIPTION - Rs.60/= FOREIGN - Rs.600/=





*(ஜாமக்காரனில்) எல்லாவற்றையும் சோதித்துப் பார்த்து நலமானதைப் பிடித்துக் கொள்ளுங்கள். 1 தெச 5:21*

*ஆவிக்குரியவன் எல்லாவற்றையும் ஆராய்ந்து நிதானிக்கிறான், ஆனாலும் அவன் மற்றொருவனாலும் ஆராய்ந்து நிதானிக்கப்படான். 1 கொரி 2:15.*


0427 - 2387499. E-mail : jamakaran@yahoo.com. Fax: 0427- 2386464. www.jamakaran.com




**கர்த்தருக்குள் அன்பானவர்களே,**

உங்கள் யாவருக்கும் எங்கள் **அன்பின் கிறிஸ்மஸ் வாழ்த்துக்கள்.** வருடத்தின் கடைசி மாதம் கடைசி நாட்களை கடந்துக்கொண்டிருக்கிறோம். இதுவரை கிருபையாக நம்மை வழி நடத்திய தெய்வத்தை நன்றியோடு துதிப்போம்.

கடந்த காலத்தை சற்றே திரும்பி பாருங்கள். எத்தனை பிரச்சனைகள்,விதவிதமான வியாதிகள் நம்மை தாக்கி இருக்கலாம். நம் பிள்ளைகளின் பிரச்சனை பெரும் மனமடிவை உண்டாக்கியிருக்கலாம். கடந்த மாதங்களில் வேலையில் தோல்வி ஏற்படும் நிலை உருவானது. அதை மீட்டு கொடுத்தார். பெரும் கடன் வாங்கும் நிலை உருவானது, திருமண தடை, அதனால் ஏற்படயிருந்த அவமானம், மரண தருவாயில் வீட்டிலும், ஆஸ்பத்திரியிலும்,மரணத்தின் விளிம்பை தொட்டீர்கள். ஆனால் நம் ஆண்டவர் இயேசுகிறிஸ்து உங்களை கைவிடவில்லை. கடைசி நிமிடத்தில் கைதூக்கி நம்மை காத்தாரே!. இரகசிய அவமானத்திலிருந்தும் விடுவித்தாரே!. வருடத்தின் கடைசி நாட்களில் அவைகளையெல்லாம் நினைத்து கர்த்தரை துதிப்போம்.

சிலரின் குடும்பம் உடைந்துவிடும் என்ற நிலை வந்தபோது ஒரே இரவு நிலைமை தலைகீழாக மாறியதே ! உடைய இருந்த குடும்பம் ஒன்றானது. அதனால் இழந்த சந்தோஷம் எத்தனை பேருக்கு திரும்ப கிடைத்தது. எத்தனை திருப்தி, எத்தனை சமாதானம். நம்மை பார்த்துக்கொண்டிருந்தவர்கள் முன்னிலையில் கர்த்தர் நம்மை தலைகுனிய வைக்க அனுமதிக்கவில்லையே!. இது எத்தனை பெரிய கிருபை அல்லவா ! நாம் பல நாட்கள் பலமுறை கர்த்தரை தேடாமல் போனோம். ஜெபிக்கவும் மறந்தீர்கள்!. வேதம் வாசிக்க மறந்தீர்கள்!. ஆனால் இயேசு உங்களை மறக்காமல் **நீங்கள் கேட்காமலே** உங்களை கிருபையாக வழிநடத்தினாரே!.

உங்கள் வாழ்க்கையில் குடும்பத்தில் காணப்பட்ட இப்படி ஏராளமாக தேவ கிருபைகளை குறித்து இந்த **வருட கடைசி நாட்களில்** தனியாக அமர்ந்து அத்தனையையும் நினைத்து நினைத்து நன்றி கூறுவோம்.

இந்த வருடத்தின் கடைசி நாட்களில் உயிரோடு வாழும் நீங்கள், **தனியாக ஜெபிக்க** தனிமையை நாடி செல்லுங்கள். அமைதியாக கர்த்தரின் பாதத்தில் அமர்ந்து அவரிடம் ஒன்றும் கேட்காதீர்கள். அவர் செய்த நன்மைகளை மத்திரம் ஒன்றன்பின் ஒன்றாக நினைத்து நன்றி கூறுங்கள் அதுபோதும். இதை எழுதுகிற நான் அப்படி செய்வேன். என் வாழ்நாளில் என் ரயில் பயனத்தில்தான் நான் அதிகம் கர்த்தரை நினைக்கும் இடமாக அமைந்தது. மணிக்கணக்காக பயணம் செய்துக்கொண்டிருக்கும்போது என் படுக்கையில்(Sleeper) அல்லது ரயில் பெட்டியின் கதவை திறந்து வெளி உலகை பார்த்த வண்ணம் நின்றுகொண்டிருக்கும்போது மேலே நான் குறிப்பிட்டது கர்த்தர் என் வாழ்வில் செய்த நன்மைகளை ஒவ்வொன்றாக நினைத்து நினைத்து துதித்துக்கொண்டேயிருப்பேன். அதில் ஒரு தனி இன்பம் உண்டு.

கர்த்தரிடம் நான் கேட்க ஒன்றுமில்லை. எதையும் கேட்காமலேயே என்னையும், என் ஊழியத்தையும் எத்தனை அருமையாக நடத்தி வருகிறார் என்பதை நினைத்து துதிப்பேன். மற்ற ஊழியர்களைவிட மற்றவரிகளின் ஊழியத்தைவிட என் ஊழியம் மிகவும் **வித்தியாசமானதுதான்,** பிரச்சனையுள்ளதுதான், **ஆபத்துக்கள்** நிறைந்ததுதான், **எதிர்ப்புகள்** மிக அதிகம் நிறைந்ததுதான். கொலை செய்ய கூலிப்படையை ஏற்பாடு செய்தவர்களும் உண்டு. ஆனால் இதன் நடுவே கர்த்தர் எனக்கு அருளியிருக்கும் சுகம் மன நிம்மதி, பாதுகாப்பு மிக மிக ஆச்சரியமானதாகும். கர்த்தருக்கே மகிமை உண்டாவதாக.

கர்த்தரிடத்தில் மன மகிழ்ச்சியாயிரு அவர் உன் இருதயத்தின் வேண்டுதல்களை உனக்கு அருள்செய்வார். சங் 37:4.

❖ வாசகர்களுக்கு சரியான உபதோசத்தை **அறிவிப்பது, சபையில் ஸ்தாபனத்தில நடக்கும் ஊழல்களை வாசகர்களுக்கு அறிவித்து எச்சரிப்பது** இதுதான் என் **பத்திரிக்கை ஊழியம்.** அதனால் என் ஊழியத்துக்கு எதிராக உண்டான **அடைபட்ட கதவுகள்** ஏராளம். என் ஊழிய வாசலை தங்கள் சபைகளில் அடைத்த **பிஷப்மார்கள்** ஏராளம். வடக்கு-தெற்கு இப்படி நான்கு திசைகளிலும் இந்தியா முழுவதும் உள்ள **பிஷப்மார்,** பல இடங்களில் உள்ள **மாடரேட்டர்கள்** ஜாமக்காரனில் எழுதிய என் கட்டுரையை வாசித்து என்னை வெகுவாக வெருத்தார்கள். என்னை பகைத்தார்கள். தங்கள் **டையோசிஸ்களில்** இவரை பிரசங்கிக்க அனுமதித்தால் தானே இவர் நம் ஊழல்களைப்பற்றியெல்லாம் தன் பத்திரிகையில் எழுதுகிறார். அப்படியே நம்முடைய **தவறுகளைகூட** பத்திரிகையில் எழுதுகிறார். ஆகவே குறிப்பிட்ட சில சபை தலைவர்கள் **பிசாசின் கையாளாக மாறி,** பிசாசு விரும்புகிற **நவீன உபதேசத்தை** சபைக்குள் புகுத்தி மக்களை **பெயர் கிறிஸ்தவர்களாகவே வாழ செய்து,** அவர்கள் **உயிர்மீட்சி பெறாமல்** வசனத்துக்கு நேராக அவர்களை திரும்ப செய்யாமலும் இருக்க, என்னை போன்ற **வசனத்தை** மட்டும் போதிக்கின்ற **ஊழியர்களை** சபைக்குள் நெருங்கவிடாமல் பார்த்துக்கொண்டார்கள். 2018ம் வருட ஆரம்பத்திலிருந்த என்னை தடைசெய்ய பெருத்த முயற்சிகளை செய்து அதற்காக தன் மிகப்பெரிய அதிகாரங்களை உபயோகித்து என்னை சபையிலிருந்து முடக்கபார்த்தான். ஆனால் சபையை விட்டு நீக்கும் முயற்ச்சிகளில் பிசாசு பெருத்த தோல்வியைத்தான் சந்தித்தான்.

❖ **பாகாலுக்கு** முழங்கால் படியிடாதவர்கள் சிலரை நான் பாதுகாத்து வைத்திருக்கிறேன் என்பதை தரிசனம் மூலமாக கர்த்தர் எலியாவுக்கு காட்டினார். கர்த்தர் தெரிந்ததெடுத்த உண்மை ஊழியர்களுக்கும் அதைப்போலவே இப்போது காட்டி பெலப்படுத்தினார். **பாகாலுக்கு** முடங்காதவர்கள் பெருத்த கூட்டம் **கேரளாவிலும்,** தமிழ்நாட்டிலும், **இந்தியா** முழுவதிலும், உலக நாடுகளிலும் தான் ஆயத்தப்படுத்தியிருப்பதை கர்த்தர் **என் ஊழியததிலும்** எனக்கு **காட்டினார்.** அவர்களை அந்த **ஆயர்களை பிஷப்மார்** சிலரை கொண்டும் சபைகளில் உள்ள நல்ல விசுவாசிகளைக்கொண்டும் என் ஊழியத்தில் பெருத்த காரியங்களை கர்த்தர் நடப்பித்தார். **இப்போதும்** நடப்பித்துக்கொண்டிருக்கிறார்.

**பாகாலுக்கும், அவன் பிரதான பூசாரிகளுக்கும்** பயந்தவர்கள், அவர்களுக்கு கீழ்ப்படிந்தவர்கள் மட்டும் **என் ஊழியத்தை** தங்கள் சபைகளில் நடத்த தயங்கினார்கள், **பயந்தார்கள்.** ஆனால் சபைகளில் உள்ளே உள்ள **இரட்சிக்கப்பட்டவர்களின்** கூட்டம் அதாவது பாகாலுக்கு கால் முடக்காதவர்கள் கொஞ்சபேர் எல்லா சபைகளிலும் உண்டு. அவர்கள் மிக தைரியமாக ஒன்று சேர்ந்து தங்கள் **ஆயர்களை** சம்மதிக்க வைத்து என் பிரசங்கத்தை சபை மக்கள் கேட்க, வசனத்தில் வளர குறிப்பிட்ட அநத் சில விசுவாசிகள் ஆவல் கொண்டு எனக்காக சிறப்பான **கூட்ட ஏற்பாடுகளை** செய்தார்கள். இப்போதும் அப்படிப்பட்ட சிலரால்தான், இத்தனை எதிர்ப்புகளுக்கிடையே என் ஊழியங்கள் **இடைவெளியில்லாமல்** தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. கர்த்தருக்கு ஸ்தோத்திரம் !

**வெளிநாடுகளிலும்** அப்படியே பல விசுவாசிகள் இணைந்து அவர்கள் துணிந்து **என் ஊழியத்தை** நடத்திக்கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்களுக்காக தேவனை துதிக்கிறேன். வெளிநாடுகளில் அன்னிய பாஷை பேசும் ஊழியர்கள் தங்கள் சபை விசுவாசிகள் மூலம் என் ஊழியத்தை தடைசெய்ய பல வருடம் முயன்று தோல்வியடைந்தது மட்டுமல்ல அவர்களும் என் ஊழியத்தில் பங்குகொண்டனர்.

❖ சபை மக்களுக்கு நான் **அறிவிக்கவேண்டிய** தேவ இரகசியங்கள் எவ்வளவோ இருக்கிறது!. அவைகளை சபை மக்களுக்கு அறிவிக்கவே ஆண்டவர் என்னை **அபிஷேகித்தார்.** இத்தனை வயதிலும் நான்கு மணிநேரம், இரண்டுமணிநேரம் நிறுத்தாமல் தண்ணீர் குடிக்காமல் **நின்றுகொண்டே** பிரசங்கிக்க அடியேனுக்கு கர்த்தர் **பெலத்தையும்,** ஆயுளையும் கூட்டி கொடுத்து வருகிறார். இந்த 2018ம் வருடம் முடியபோகிற இந்த **கடைசி மாதத்தில்** இவைகளைக்குறித்து ஏனோ என் மனம் என்னை யோசிக்க வைத்தது. அதனால்தான் என் **ஜாமக்காரன் குடும்பங்களின்** மக்களுக்கு இதை அறிவிக்கிறேன்.

❖ இந்த நேரத்தில் **இந்தியாவிலேயே** என் ஊழியத்துக்காக ஜெபிக்கிறவர்கள் தமிழ்நாட்டில் **நாகர்கோவில், திருநெல்வேலி,தூத்துக்குடி,சென்னையில்** சில இடங்களில், **மதுரை** மாவட்டத்தில் சில இடங்களில், இவர்கள் எல்லோரும் எனக்காக ஜெபிப்பதோடு மட்டுமல்லாது **பணஉதவியும்** செய்து என் ஊழியத்தை தாங்குகிறார்கள்.

❖ என் ஊழியத்தில் பண விஷயத்தில் மிக அதிகம் தாங்குகிறவர்கள் கேரள மாநிலத்தில் **மத்திய கேரளா டையோசிஸ், (சிஎஸ்ஐ, மார்தோமா)** சபை விசுவாசிகள்,தெற்கு கேரளா ஆகிய இடங்களிலும், **மலபார்** - கொச்சி ஆகிய இடங்களில் உள்ளவர்களும் என்னை தொடர்ந்து

தாங்குகிறார்கள். மேலே குறிப்பிட்ட இந்த இரு சபைகளிலும (CSI மார்தோமா) உள்ளவர்கள் பெரும்பாலானவர்கள் பிஷப்மாரை மிகவும் மதிக்கிறவர்கள் ஆகும், குறிப்பிட்ட தலைவர்கள் (பிஷப்) பாவமே செய்தாலும் அதை பொருட்டாக நினைக்காதபடி அந்த தலைவர்களை தெய்வத்துக்கு **அடுத்த ஸ்தானத்தில்** இவர்கள் வைத்திருப்பார்கள். ஒரு சிலர் அவர்களை (பிஷப்மார்களை) **தெய்வமாகவே** நினைக்கிறார்கள். அவர்கள் தங்கள் பிஷப்மார் கைகளை வரிசையாக வந்து ஒவ்வொருவராக முத்தம் செய்வார்கள். இதை ஒரு சடங்காக சில சபைகளில் இப்போதும் தொடங்குகிறார்கள்.

கேரளத்தில் ஒரு **கன்வென்ஷன்** நடந்தால் நோட்டீஸ்,வால்போஸ்ட் அடிப்பவர்களும், தினசரி செய்திதாளில் விளம்பரம் செய்பவர்களும் விளம்பர வார்த்தைகள் எழுதிகொடுக்கும்போது **பிஷப்மார்களின்** பெயர்களை மிகப்பெரிய எழுத்துகளிலும், **பிரசங்கிப்பவர்கள்** எத்தனை பெரிய ஊழியரானாலும் **பிரசங்கப்பவர்களின்** பெயர்களை **சிறு எழுத்தில்தான்** அச்சிடுவார்கள். மக்கள் **பிஷப்பை** பார்க்கவோ அல்லது பிஷப் அவாகளின் பிரசங்கத்தை கேட்கவோ வருவதில்லை. **பிரசங்கியரை** எதிர்ப்பார்த்துதான் மக்கள் கூட்டத்துக்கு வருகிறார்கள். இது கூட்டம் நடத்துபவர்களின் அடிமைதனத்தை காட்டுகிறது. **பிஷப்மார்** பெயரை **மிகப்பெரிதாக** அச்சடிக்காமல்போனால் **பிஷப் கோபித்துகொள்வாரே** என்ற பயம் அவர்களுக்கு அதிகம். இன்னும் அந்த **தாழ்வு மனப்பான்மை** இவர்களை விட்டுவிலகவில்லை. **இப்படிப்பட்ட சடங்குகளில் மாற்றம் வரும்போதுதான்** சபையில் பல விஷயங்களில் **மாற்றம் வரும். மாராமன்** கன்வென்ஷன் என்பது கேரளத்தில் பிரசித்தி பெற்றதாகும். அந்த கூட்டத்தின் விளம்பர நோட்டீசை பார்த்தாலே நான் எழுதியது சரி என்று விளங்கும். ஆனால் இரட்சிக்கப்பட்ட மக்கள் பெரும்பான்மையாக உள்ள டையோசிஸ்களில், இப்படிப்பட்ட விஷயத்தில் நல்ல மாற்றம் உண்டு.

2018ம் வருடத்தின் கடைசி மாதமாக இருப்பதால் மனதில் உள்ளதை அப்படியே கொட்டிவிட்டேன். இந்தியா, இலங்கை உலக மனைத்திலும் உள்ள என் ஜாமக்காரன் வாசகர்களுக்காக தேவனை துதிக்கிறேன். வாசகர்கள் பலர் Money Transfer (NEFT) மூலமாகவும் M.O., D.D. செக் மூலமாகவும் எனக்கு அனுப்பிய காணிக்கை யாவும் பெற்றுக்கொண்டேன். காண்க்கையாவுக்காகவும் மனதார நன்றி கூறுகிறேன்.

வாசக குடும்பங்கள் அனைவருக்கும் **கிறிஸ்மஸ்** & **2019ம் புதுவருட வாழ்த்துக்களையும்** குடும்பமாக கூறிக்கொள்கிறோம். தொடர்ந்து நான் உங்களுக்காக ஜெபிக்கிறேன். கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக. ஆமென்.

(குறிப்பு: ஜாமக்காரன் பத்திரிகைகள் ஒவ்வொரு மாதமும் சரியான தேதிகளில் அச்சடிக்கப்பட்டு முடிந்தாலும் தபாலில் சேர்க்க **ஸ்டாம்புகள் கிடைப்பதில்லை.** சேலத்தில் எங்கும் 2 ரூபாய் ஸ்டாம்புகள் **அனைத்து தபால் நிலையங்களிலும்** கைவசம் இல்லை என்கிறார்கள். ஆட்களை தமிழ்நாடு, கேரளா ஆகிய இடங்களுக்கு அனுப்பி ஒவ்வொரு இடத்திலும் எவ்வளவு ஸ்டாம்ப் கிடைத்தாலும் அவைகளை கொஞ்ஜ கொஞ்ஜமாக பணம் கொடுத்து வாங்கி கொஞ்ஜ கொஞ்ஜமாக ஸ்டாம்புகள்ஒட்டி அனுப்பிக்ககொண்டிருக்கிறோம். மத்திய அரசாங்கத்தின் தபால் துரையின் இப்படிப்பட்ட மெத்தனமான செயலால் இந்த பெரும் தாமதம் ஏற்பட்டது.)

கர்த்தரின் பணியில்

**டாக்டர்.புஷ்பராஜ்**

# கேள்வி – பதில்

## ஜாமக்காரனின் பதில்கள்

**கேள்வி:-** முன்பெல்லாம் உங்கள் கூட்டத்துக்கு **பிஷப்மார்** தலைமை தாங்கி நடத்துவதை கண்டுருக்கிறோம். ஆனால் இப்போதெல்லாம் **பிஷப்மார் -** நீங்கள் பேசும் மேடையில் காணப்படுவதில்லையே? சில **பிஷப்மார்** மட்டும் கேரளத்திலும்,தமிழ்நாட்டிலும் சில இடங்களில் மட்டும் உங்கள் கூட்டத்துக்கு தலைமை தாங்குகிறார்கள். ஏன் இப்படி?

**பதில் :** இந்திய முழுவதும் உள்ள **CSI, CNI, மார்தோமா,மெத்தடிஸ்ட்** ஆகிய சபைகளின் பிஷப்மார்களில் **சிலர்** நிர்வாகிகளின் ஒத்துழைப்போடு டையோசிஸ்ஸில்உள்ள **சபை மக்களின் காணிக்கை பணத்தை கோடி** கோடியாய் கையாடல் செய்தார்கள். டையோசிஸ் நடத்தும் **கல்லூரிகளின் பணத்தை** தன் வங்கி அக்கவுண்டுக்கு லட்சக்கணக்கில் மாற்றிக்கொண்டார்கள், அதே டையோசிஸ்ஸில் ஊழயர் செய்யும் பெரும்பாலான **ஆயர்களுக்கே** அந்த விபரம் தெரியவில்லை. **சபை மக்களுக்கும்** தெரியவில்லை. பல மாவட்டங்களில் **டையோசிஸ் நிலம். ஆலயத்தோடு இணைந்த நிலம்** நிர்வாக கமிட்டிக்கு தெரியாமல் விற்கப்பட்டிருக்கிறது. விற்கப்பட்ட நிலம் கை மாறியும் அந்த **டையோசிஸ் ஆயர்களும், சபை மக்களும்** அதை அறியவில்லை.

CSIயின் 24 டையோசிஸ்களில் இரண்டு இடங்களில் **இரண்டு பிஷப்மார்** கொலை குற்றம் சாட்டப்பட்டு ஜாமீனில் வெயியே வந்து வழக்கு நடத்திக்கொண்டிருக்கிறார்கள். பெரும் பணம் கொடுத்து இப்போதும் வழக்கை தள்ளி போட்டுக்கொண்டிருக்கிறார்கள். அதில் ஒருவர் **தூக்கில்** தொங்க வேண்டியவர். ஆனால் அதற்குள் **இயற்கை மரணம்** அடைந்தார்.

## CSIக்கு அனுப்பப்பட்ட சுனாமி பணம் கொள்ளை

**CSI சினாட்டுக்கு** சில வருடங்களுக்குமுன் **அமெரிக்காவில்** இருந்து அனுப்பப்பட்ட **சுனாமி நிவாரண உதவி பணம்** பல கோடிகள் கையாடல் செய்யப்பட்டு **மாடரேட்டர்** முதல் CSI, **சினாட் செயலர்** இன்னும் சிலர் கையும் களவுமாக பிடிப்பட்டார்கள். ஆனால் மாடரேட்டரை தவிர மற்றவர்கள் **ஜெயிலில் அடைக்கப்பட்டார்கள். கடலே இல்லாத இடத்தில் உள்ள டையோசிஸில் பிஷப்** ஒருவர் என் பங்குக்கு **சுனாமி பணம் பிரித்து கொடுங்கள்** என்று செல்லிவிட்டு சொத்தை பாகமபோட்டு பிரிப்பதுபோல் சுனாமி பணஉதவி பணத்தை பிரித்து வாங்கிப்போனார்கள். CSI சினாட் மூலம் வாங்கிய **பல கோடி சுனாமி** பணத்துக்கு கேரளத்தில் ஒரு டையோசிஸ் தவிர வேறு யாரும் கணக்கு சமர்பிக்கவில்லை. மத்திய கேரள CSI டையோசிஸ் கணக்கு சரியாக எழுதி வைத்திருப்பதாக அறிவித்துள்ளனர்.

எப்படியோ மேற்கண்ட **ஊழல் விபரங்களை** விதவிதமான பெயரில்உள்ள சபைகளும், டையோசிஸ்ஸில்உள்ள மக்களில் சிலர் பல ஆதாரங்களை திரட்டி அவர்களின் வங்கி புத்தக காப்பியுடன் எனக்கு அனுப்ப அதை ஜாமக்காரனில் வெளியிட்டேன் மற்றும் **பிஷப்மார் எலக்ஷனில்** பிஷப்பை தேர்ந்தெடுக்க சில **மாடரேட்டர்கள்** எவ்வளவு வாங்கினார்கள்?, யார் மூலமாக அந்த பணம் எந்த இடத்தில் வைத்து அந்த லஞ்வப் பணம் கை மாறியது போன்ற விவரங்களை பல வருடங்களாய் **ஜாமக்காரனில்** அறிவித்து வாசகர்களுக்கு தெரிவித்தேன். அதன்மூலமாக பல டையோசிஸ்களில் உள்ளவர்களில் சிலர் நான் எழுதியவற்றை அவர்கள் தைரியமாக அந்த ஊழல் விவரங்களை சபை ஜனங்கள் அறிய **துண்டுபிரதிகள்** அச்சிட்டு வெளியிட்டார்கள்.

இப்போது சொல்லுங்கள், பிஷப்மார்களைக்குறித்து இப்படியெல்லாம் நான் ஜாமக்காரனில் எழுவதை அறிந்த **எந்த பிஷப்மார்களாவது என்னை இஷ்டப்படுவார்களா?.** இப்படி நான் எழுவதை தவறு செய்யாத பிஷப்மார்கூட அதை ஒரு **கௌரவ பிரச்சனையாக** எடுத்துக்கொண்டு, **தவறு செய்யாத அந்த பிஷப்**மார்கள் என்னோடு கன்வென்ஷன் மேடையில் அமர இஷ்டப்படுவதில்லை. காரணம், பிஷப்போடு சேர்த்து என்னையும் புகைப்படம் எடுப்பதையும் அது பத்திரிக்கையில் வெளியிடுவதையும் அவர்கள் விரும்புவதில்லை.

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

**கேள்வி :** மிஷனரிகள் அந்த காலத்தில் மக்களுக்கென்று வாங்கிப்போட்ட டையோசிஸ் சொத்துகளையும், சபைகளின் சொத்துக்களையும், நிலங்களையும் சிலர் விற்கிறார்கள். விற்ற பணத்தின் சிறிய தொகையை மட்டும்தான் கணக்கில் காட்டுகிறார்கள். பெரும் தொகைகளை பங்கு போட்டுக்கொள்கிறார்கள் என்று நீங்கள் எழுதியதை நிரூபிக்க முடியுமா?.

**பதில் :** தென்இந்தியாவில் உள்ள 24 CSI டையோசிஸ்களில் பல இடங்களில் அந்த காலத்து **மிஷனரிகள்** வாங்கிக் கொடுத்த நிலங்கள் விற்கப்பட்டதை அந்தந்த டையோசிஸ்ஸில் உள்ளவர்களையே விசாரித்தால் போதுமே!. அல்லது இப்படியும் விவரங்களை சேகரிக்கலாம். சபைக்கு சம்பந்தமே இல்லாதவர்கள்கூட **பத்திரம் பதிவு** செய்யும் ரெஜிஸ்டர் ஆபிஸீல் பிரச்சனை உள்ள குறிப்பிட்ட இடத்தை மனுவில் குறிப்பிட்டு அதற்கான சிறுதொகையை கட்டி ரசீது வாங்கி விண்ணப்பித்தால் சில தினங்களில் அந்த இடத்தின் ஒரிஜினல் பத்திர நகல் உங்களுக்கு கிடைக்கும்.

மேலும் அந்தந்த டையோசிஸ்ஸின் கணக்கு வரவு- செலவு பார்க்கும் ஆடிட்டர்களை நீங்கள் விசாரித்தாலே போதும். பல விவரங்களை அவர் உங்களுக்கு அறிவிப்பார். உதாரணத்துக்கு சென்னையில்(Madras C.S.I)க்கு சொந்தமான இடங்களில் உள்ள **பள்ளி மைதானத்தையும்,** கல்லூரி நிலங்களையும் யாருக்கும் தெரியாமல் C.S.I காரர்கள் மூலமாகவே

விற்கப்பட்டு விட்டது. இப்போது **சென்னை திருமண்டலத்தில்** பதவியிலிருக்கும் **பிஷப்.ஜார்ஜ் ஸ்டீபன்** அவர்களுக்குமுன் பதவியிலிருந்த பிஷப்.**தேவசகாயம்** அவர்கள் காலத்திலும் அதற்கு முன்னிருந்த **பிஷப்மார்கள்** காலத்திலும் திருமண்டல சொத்துக்களைக்குறித்து அவர்கள் காட்டிய அலட்சியத்தால் சென்னை **தாம்பரம் கிறிஸ்துவ கல்லூரி, நுங்கம்பாக்கம் மகளிர் கிறிஸ்துவ கல்லூரி, சென்னை ராயப்பேட்டை மெஸ்டன் கல்வியல் கல்லூரி, அதே ராயப்பேட்டையில் வெஸ்லி கல்லூரி, புரசைவாக்கம் கிறிஸ்டோபர் ஆசிரியர் கல்லூரி** ஆகியவைகளின் **நிலங்கள்** டையோசிஸ் பொறுப்பிலிருந்து **தனியார் கைக்கு** போய்விட்டதே!. விற்ற பணம் பலரின் பாக்கெட்டுக்குள் போய் அடைக்கலம் புகுந்துவிட்டதே. இனி ஒன்றும் செய்யமுடியாது என்றாலும் இப்போதும் அவைகள் CSI மக்களாகிய நமக்கு திரும்ப கிடைப்பதற்கு வழி இருக்கிறது.

ஆனால் C.S.I. சபை மக்களும் இதைக்குறித்து அக்கறை காட்டுவதில்லை. அதை மீறி **கேள்வி கேட்டால் பிஷப்பால்,** ஆயர்களால் என்னை **(Dr.புஷ்பராஜ்)** போல ஒதுக்கி வைக்கப்படுகிறார்கள்.

ஒவ்வொரு டையோசிஸ்க்கும் டையோசிஸ் சொத்துக்களை நிர்வகிக்க CSI டையோசிஸ் சட்டப்படி **சொத்து கமிட்டி,நிர்வாககமிட்டி, நிதி கமிட்டிகள்** உண்டு. இதில் தேர்ந்தெடுக்கப்பட்ட வர்களின் குறிப்பிட்ட இந்த கமிட்டி நிர்வாகத்தில் உள்ளவர்களை ஆலோசிக்காமல் **பிஷப்பும்,** பிஷப்பை ஆட்டிப்படைக்கும் சிலரும் **இவர்களாகவே தீர்மானம் செய்து** சபை மக்களை ஏமாற்றி லீகல் செல் என்ற ஒரு கமிட்டியை ஏற்படுத்தி அந்த கமிட்டி முழுவதும் பிஷப தன் கட்டுப்பாட்டில் வைத்துக்கொண்டு என்னனென்ன எப்படிப்பட்ட **அநியாயங்களை** செய்கிறார்கள் தெரியுமா?

❖ சென்னையில் வேப்பேரில் **St.Pauls Higher Secondary Schoolக்கும், High School**க்கும் சொந்தமான இடத்தில் 49 கிரவுண்ட் அது சுமார் 200 **கோடி மதிப்பு** உள்ளது. அந்த நிலத்தை முன்பு **பிஷப்பாக** இருந்த **தேவசகாயம்** அவர்கள் **ஆமினி பஸ் முதலாளி** (Parveen Travels) க்கு மாத வாடகைக்கு நிலத்தை விட்டுக்கொடுத்தார். அதில்தான் இப்போதும் **Parveen Travels** பஸ்கள் அனைத்தும் நிறுத்தி இயக்கப்படுகின்றது.

சில ஆண்டுகள் கழித்து வாடகைக்கு விடப்பட்ட **பர்வீன் டிராவல்ஸ்** பொருப்பாளர்களுக்கு இடத்தை காலி செய்யும்படியும் முறைப்படி நோட்டீசு கொடுக்கப்பட்டது. CSI மாணவர்களுக்காக கட்டிடம் கட்டுவதற்காக அந்த இடம் C.S.I. க்கு தேவை என்று எழுதி அவர்களை காலி செய்யுமாறு **டையோசிஸ் நோட்டீசு** அனுப்பியது. ஆனால் Parveen Travels முதலாளி கோரட்டுக்கு போய் எங்களை காலி செய்ய C.S.Iக்கு அனுமதி கொடுக்கக்கூடாது என்று வழக்கு தொடுத்தார். அந்த நிலம் சென்னை மாநகரத்தின் மையப்பகுதியும் கூடுதல் விலை மதிப்பும் உள்ள நிலமாகும்.

வழக்கில் டையோசிஸ் சார்பாக **தீர்ப்பு வெற்றியாக** வந்தது. ஆனால் தீர்ப்புக்கு பின்னும்(Praveen Travels)இடத்தை காலி செய்யமாட்டேன் என்ற டிராவல்ஸ் முதலாளி இப்போதும்

பிடிவாதம் பிடிக்கிறார். **மெட்ராஸ் C.S.I. டையோசிஸ்** டிராவல்ஸ் ஸ்தாபனம்மீது **கோர்ட் அவமதிப்பு வழக்கு** போட்டு அந்த நிலத்தை அப்போதே கையோடு அந்த நிலத்தை திரும்ப வாங்கியிருக்கலாம். டையோசிஸ் தனக்கு எதிராக நடவடிக்கைகளை உடனே எடுக்காதபடி **மௌனமாக இருக்க** நிர்வாகிகள் சிலருக்கு பெரும்தொகை கைமாறி இருக்குமோ!. அதனால் டையோசிஸ் வழக்கு நமக்கு சாதகமாக தீர்ப்பு அளித்தும் டையோசிஸ் நிர்வாகிகள் தீவிரம் காட்டாதிருக்கிறார்களோ! என்று C.S.I. சபைக்குள்ளேயே பேச்சு அடிப்படுகிறது.

CSI மெட்ராஸ் டையோசிஸ் **லே செயலர்** திரு. **டைட்டஸ்** அவர்கள் பத்திரிக்கை நிருபர்களிடம் கூறும்போது **பர்வின் டிராவல்ஸ்க்கு** நிலத்தை உபயோகப்படுத்த கொடுக்கப்பட்ட ஒப்பந்தம் காலாவதியாகி கோர்ட் தீர்ப்பு வந்த பிறகும் அவர் அந்த இடத்தை காலி செய்யாமல் அங்கேயே தன் கம்பெனி தொடர வேண்டும் என்று அதற்கான வாடகையை மாதா மாதம் டையோசிஸ்க்கு அனுப்பியதாகவும், அந்த வாடகையை **நாங்கள் பெற்றுக்கொள்வதில்லை** என்றும் அவர்கள் அனுப்பிய வாடகை தொகையை **அவர்களுக்கே திருப்பி அனுப்பிவிட்டோம்** என்றும் கூறினார். மேலும் அவர் கூறியதாவது CSI டிரஸ்டுக்கான எந்த நிலத்தையும் விலைக்கு யாருக்கும் விற்க முடியாது என்பது சட்டம். அது **எங்களுக்கும் தெரியும்.** அந்த நிலத்தை மீட்டெடுக்க **பிஷப்.ஸ்டீபன் ஜார்ஜ்** அவர்களும், **நிர்வாகிகளான** நாங்களும் சட்டப்படி முயற்சி செய்யாமல் இல்லை! என்றார் என்று கூறியதாக ஒரு செய்தி குறிப்பு கூறுகிறது.

## அமெரிக்கன் கல்லூரி (மதுரை)

இதேபோல் **மதுரை CSI நிலங்களும்** பிஷப். **கிறிஸ்டோபர்ஆசீர்** அவர்கள் காலத்தில் பல இடத்தில் மலமலவென விற்கப்பட்டன. பிரசித்திபெற்ற **அமெரிக்கன் காலேஜ்** நிலங்களையும் **பிஷப்** அவர்கள் **விற்க முயற்சித்தபோது** அமெரிக்கன் காலேஜில் படித்த **மாணவர்கள், புரோபர்சர்ஸ்** யாவரும் இணைந்து பிஷப் **ஆசீர்** அவர்களுக்கு எதிராக **போராட்டம்** நடத்தினார்கள். பிஷப் மூலமாக ரவுடிகள் கல்லூரிக்குள் புகுந்து அடாவடி செய்ய ஏற்பாடு செய்யப்பட்டது. பிரச்சனை நீதிமன்றம் சென்றது. அமெரிக்கன் கல்லூாரி சொத்தின் மீது CSI டையோசிஸ் அல்லது **பிஷப்** தலையிடலாமா? என்ற கேள்வி எழுந்தது. அமெரிக்கன் கல்லூரிக்காக நியமிக்கப்பட்ட நிர்வாகிகளால் அந்த கல்லூரி பல ஆண்டுகளாக தனித்து இயங்குவதாகும். அதே கல்லூரியில் பயின்று, புரோபர்சராக பணியாற்றிய பிரபல **பட்டிமன்ற தலைவர்** டாக்டர்.**சாலமன் பாப்பையா** அவர்கள் **அமெரிக்கன் காலேஜ், CSI டையோசிஸ்க்கு சம்பந்தம் இல்லை.** அது ஒரு **தனி போர்டால்** நிர்வகிக்கப்படுகிறது என்று போராடினார். **பிஷப் ஆசீர்** அடியாட்களை கல்லூரிக்குள் அனுப்பி பயமுறுத்திப் பார்த்தார்.

அந்த கல்லூரியில் பயின்று ஆசிரியராக தான் பணியாற்றியதற்காக அதற்கு செலுத்தும் நன்றி கடனாக **திரு.சாலமன் பாப்பையா** அவர்களே **அமெரிக்கா** நாட்டிற்கு சென்று **அமெரிக்கன் காலேஜ்** டையோசிஸ்க்கு சொந்தமில்லை என்பதற்கான **ஆதாரத்தை** திரட்டி

இந்தியா கொண்டுவந்து நீதிமன்றத்தில் அதை சமர்பித்து **அமெரிக்கன் காலேஜை டையோசிஸ் கையில்** இருந்து காப்பாற்றி கொடுத்தார்.

- **சேலத்தில் அஸ்தம்பட்டி** என்ற இடம் உண்டு. **அங்கு ஒரு CSI ஆலயம் உள்ளது.** அதை ஒட்டி **CSI ஆசிரியை பயிற்சி பள்ளி, ஒரு எலிமென்டரி ஸ்கூல்,பாலர் ஞான இல்லம்** ஆகியவைகள் உண்டு. இந்த இடங்களை சுற்றி ஏராளமான நிலங்கள். அந்த காலத்தில் மிஷனரிகள் CSI சபை மக்களுக்காக, CSI சபை அங்கத்தினர்களின் பிள்ளைகளுக்கு **கல்வி முன்னேற்றத்திற்காக** அந்த நிலங்களை வாங்கி பதிவு செய்தனர். **எலிமென்டரி ஸ்கூலை ஹையர்கிரேட் பள்ளியாக** மாற்ற நிலம் உபயோகப்படுத்தப்போகிறோம் என்றார்கள். ஆனால் அந்த பள்ளிக்கூடத்துக்கு பின்புறம்உள்ள காலி நிலத்தை வெளி ஆட்களுக்கு விற்றுப்போட்டார்கள். இது நாள் வரை அந்த பள்ளி **ஹையர் செகன்டரி பள்ளியாக** மாற்றப்படவிலலை.

CSI ஆலயத்துக்கு பின்புறம் உள்ள நிலத்தில் **இஞ்ஜினியரிங் கல்லூரி** கட்டப்போகிறோம் என்றார்கள். ஒரு நாள் **நிலம் அளக்க** சிலர் வந்தனர். எதற்காக அளக்கிறீர்கள் என்று கேட்டபோதுதான் உண்மை வெளிவந்தது. அந்த நிலத்தை **சேலம் கோயமுத்தூர் நகை கடை** முதலாளிக்கு விற்றுவிட்டதாகவும், முன்பணம் கொடுத்துவிட்டதாகவும் அறிவித்தவுடன் சிலர் ஒன்று சேர்ந்து போராடி அந்த நிலத்தை அளக்கவிடாமல் அரசாங்கத்துக்கு அறிவித்து தடுத்து விட்டனர். அந்த ஒரு சிலரின் முயற்சியில் இன்று அந்த **பெரிய நிலம் வியாபாரிகளுக்கு விற்காமல்** தடுத்துநிறுத்தப்பட்டது. இது எத்தனை பெரிய துரோகம்.

சேலம் CSI கிறிஸ்தவர்களுக்கு கிறிஸ்தவ பின்சந்ததியயினருக்கு அந்த நாட்களில் டையோசிஸ்ஸின் பொருப்பில் இருந்த பெருச்சாலிகளின் இரகசிய ஏற்பாட்டால் மிஷனரிகள் நமக்கென்று வாங்கி கொடுத்த நிலம் பறிப்போக இருந்தது. இத்தனைக்கும் நிர்வாக கமிட்டி இருந்தது. டையோசிஸ் நிர்வாக கமிட்டி இருந்தது. அந்த காலத்தில் இத்தனை கமிட்டியினரும் பெரும் பணத்துக்கு அடிமையாகி போனார்களே!. இதற்காகவா டையோசிஸ் மக்கள் சிலர் நிர்வாகிகளாக, பிஷப்மார்களாக தேர்ந்தெடுத்தார்கள்?.

இது CSI சபை மக்களுக்கு CSI சபை பெரும் பொறுப்பில் உள்ளவர்களும் அன்றைய பிஷப்மாரும் செய்த **பச்சை துரோகம்** அல்லவா? ஒரு சிலராவது தூங்கிக்கொண்டிராமல் யார் என்ன செய்தால் நமக்கென்ன என்று இருந்ததால் அல்லவா சபை மக்களால் தெரிந்தெடுக்கப்பட்ட இந்த சபை தலைவர்கள் துரோகிகளாகிப்போனார்கள்.

கேள்வி கேட்போம் நம் உரிமையை கர்த்தருக்கென்று கிறிஸ்தவ முறையோடு உரிமை நிலைநாட்டி சபை நிலங்களை பாதுகாப்போம். இந்த நிலங்கள் கிறிஸ்தவ சபைகளுக்கு சொந்தம்.

இது நம் **பின் சந்ததியனருக்கு** செய்யம் பெரும் உதவியாக இருக்கும். இன்று **சேலம்**

**CSI பாலிடெக்னிக்** சேலம் மாநகருக்கு நல்ல முன்னோடியாக இருந்து நம் பிள்ளைகளின் பயிற்சிக்கு படிப்பிற்கு வாழ்வாதாரமாக எத்தனை உதவியாக வளர்ந்து வருகிறது. கர்த்தருக்கு ஸ்தோத்திரம்.

இதையாவது விட்டுவைத்திருக்கிறார்களே என்று தேவனை துதிப்போம். சீக்கிரமே பெண்களுக்கான **CSI ஹயர்செகன்டரி பள்ளி எழும்பப்பட்டு, இன்ஜினியரிங் கல்லூரியும்** எழும்பட்டும்.

இப்படி **கேரளத்திலும்,கர்நாடாகவிலும், ஆந்திராவிலும்,தமிழ்நாட்டிலும்** டையோசிஸ் ஆலய நிலம். **கல்லூரி நிலம், பள்ளிக்கூட நிலம்** ஆகியவைகள் இன்னும் அபகரிக்கப்பட்டுக் கொண்டுதான் இருக்கிறது. தினசரி **ஒவ்வொரு டையோசிஸ் சம்பந்தமான நீதிமன்ற வழக்கின் நகல்கள்** எனக்கு **கத்தை கத்தையாக** வந்துக்கொண்டுதான் இருக்கிறது. அவைகளை எனக்கு படிக்க எனக்கு நேரம் இல்லை. மேலும் அவைகளை வாசிக்க தொடங்கும்போதே பெரும் வேதனையும், வெறுப்பும், கோபமும் வருகிறது.

இந்த ஊழல் விஷயங்கள் அத்தனைக்கும் **ஆதாரம்** உண்டு. **ஆலய பணி டையோசிஸ் மூலமாக** நடக்கும் கல்வி பணி இவைகள் யாவற்றிற்கும் கிறிஸ்தவர்களாகிய நாம் நம் சொந்த பணத்தை நற்பணிக்கு கொடுக்கவேண்டுமே தவிர, **ஆலய சொத்து, பணம், காணிக்கை பணம், கல்லூரி, பள்ளி, பாலிடெக்னிக்கிலிருந்து** கிடைக்கும் பணம் **நிர்வாகிக்கும், நிர்வாகிகள் பாக்கெட்டிலோ, பிஷப் பாக்கெட்டிலோ** இருக்கக்கூடாது.

இந்துக்கள் கூறுவார்கள், **கோவில் பணம் சர்வ நாசம்.** அதாவது கோவிலின் பணம் நம் கையில் இருந்தால் அவர்கள் **நாசம் அடைவார்கள்** என்று விக்கிரகத்தை ஆராதிக்கிறவர்களுக்கு தெரிகிறது. ஆனால் **உயிருள்ள தெய்வத்தை ஆராதிக்கும் நம் கிறிஸ்தவர்களுக்கு அந்த பயம் இல்லையே**!.

❖ **என் தகப்பனர்** சுமார் 30 வருடங்கள் **சபை செயலாளராக** சபையின் பொருப்பு வகித்தார். ஒருமுறை ஆராதனை முடிந்து மூப்பர்கள் காணிக்கை பணத்தை வட்டமாக உட்கார்ந்து எண்ணிக்கொண்டிருந்தனர். அதில் ஒருவர் ஒரு ஆளை அழைத்து **காணிக்கை பணத்திலிருந்து** ஒரு தொகையை கொடுத்து 12 மசால் வடையும்,டீயும் வாங்கி வா என்றார். இதை பார்த்த என் தகப்பனர் ஓடிவந்து அந்த பணத்தை அப்படியே காணிக்கையில் போட்டுவிடுங்கள். சபை மக்கள் கர்த்தருக்கு என்றும், **கர்த்தரின் ஊழியத்துக்கு** என்றும் ஜெபித்து அவரவர்களின் வருமானத்திலிருந்து போடும் **காணிக்கை பணம்** ஆகும். நாம் **வடையோ,** டீயோ வாங்க அல்ல. இன்று 12 பேருக்கும் வடையும்,டீயும் வாங்க நான் பணம் கொடுக்கிறேன். அடுத்த வாரம் நம்மில் யாராவது ஒருவர் பணம் கொடுத்து டீ வாங்கிகுடிப்போம். **நம் பணம் ஆலயத்தில் இருக்கலாம். ஆனால் ஆலய பணம் எடுத்து நாம் உபயோகிக்ககூடாது** என்றார். இப்படிப்பட்ட **தெய்வபயம் இன்று டையோசிஸ்** அல்லது **ஆலய நிர்வாகிகள் பலருக்கு இல்லாமல்போனாது.**

**தெய்வ பயம் இல்லாமல் போனாதுதான் இதன் முக்கிய காரணம்** ஆகும்.

❖ **நேபுகாத்நேச்சார்** தேவாலயத்தின் **பணிமுட்டுகள், பாத்திரங்கள்,** அனைத்தையும் எடுத்து சென்று தன் அரண்மனையில் உள்ளவர்கள் **மதுபானத்தை** அந்த **ஆலய பத்திரத்தில்** ஊற்றி **தானும் குடித்து** மற்றவர்களையும் குடிக்க வைத்து மகிழ்ந்தான். உடனே **தேவகோபம் நேபுகாத்நேச்சார்** ராஜாவின்மேல் இறங்கியது. அதன்பின் **அவனும் அவன் குடும்பத்தாரும் சர்வ நாசம் அடைந்தனர்** என்பதை வேதத்தில் வாசிக்கிறோமே. அதை வாசிக்கும்போதாவது அதை கேட்கும் பொருப்பானவர்களுக்கு ஒரு பயம் நடுக்கம் வரவேண்டாமா?.

❖ இந்த சம்பவம் நடந்தபின் சில ஆண்டுகள் கழித்து **எஸ்றாவின்** காலத்தில் அரசாண்ட **பாபிலோன் ராஜா** கர்த்தருக்கு பயந்து **எருசலேம் தேவாலயத்திலிருந்து** எடுத்துவந்த அனைத்து பொருள்களும், பாத்திரங்களும் தேசாதிபதியாக நியமிக்கப்பட்ட **செஸ்பாத்சாரென்னும்** நாமமுள்ளவனிடத்தில் அவைகளை ஒப்புவித்து - ஆலயத்தில் இவைகளை **எந்தெந்த இடத்திலிருந்து** எடுக்கப்பட்டதோ **அந்தந்த ஸ்தானத்தில் வைத்துவிடு** என்று கூறி அனுப்பி வைத்தான்(எஸ்றா 5:14,15).

## எச்சரிக்கை:

**கர்த்தருடைய** ஊழியத்தில் **சபை விசுவாசிகளானாலும்,சபை ஆயர்களானாலும், பிஷப்மார்களானாலும்,மாடரேட்டரானாலும், லேசெயலர், டையோசிஸ் நிர்வாகி களானாலும், எந்த சபையினரானாலும், எந்த கிறிஸ்தவ ஸ்தாபனம் நடத்துபவரானாலும் சரி அல்லது என்னைப்போல பிரசங்கியாரானாலும், ஊழியரானாலும்,மிஷனரியானாலும் கர்த்தருடைய ஊழியத்துக்காக** உள்ள **காணிக்கைகளில், பணத்தில், நன்கொடைகளில் ஊழல்** செய்தால் அது உங்களை மட்டுமல்ல, உங்கள் ஊழியத்தையும், உங்கள் குடும்பத்தையும் வெகுவாய் பாதிக்கும். ஜாக்கிறதை!.

உங்கள் சொந்த உபயோகத்துக்கான உங்கள் **பணம் நீங்கள் அறியாமல்** ஊழியப்பணத்தில் சேர்ந்து விட்டதானால் அதை திரும்ப எடுக்க முயலவேண்டாம். அது அத்தனையும் உங்களுக்கு ஆசீர்வாதமாக திரும்ப வந்துசேரும். வருடத்தின் **கடைசி மாதம்,** கடைசி தேதிகளில் நின்றுக் கொண்டிருக்கும் நாம் அனைவருக்கும் குறிப்பாக **ஊழியக்காரர்களுக்கும்** இது முக்கிய எச்சரிப்பாகும்.

❖ **ஆலயத்தின் பொருளை** தன் உபயோகத்துக்கு எடுத்து உபயோகித்த **நேபுகாத்நேச்சார் ராஜாவுக்கு** ஏற்பட்ட அழிவை ஞாபகத்தில் வைத்துக்கொள்ளுங்கள்.

❖ **50 வருடத்துக்குமுன் மிஷனரி** ஊழியர்களுக்காக **நானும்,என் மனைவியும்** சேர்த்து வைத்த பணம் எதிர்பாராது **வீட்டு உபயோகத்தின் திடீர் செலவுக்காக** செலவழித்து விட்டேன்.

அதன்பின் சில வாரங்கள் நான் **துடித்த துடிப்பு, எனக்குள் உண்டான பயம், தூக்கம் வராமல் தவித்த தவிப்பு** இப்போதும் என்னால் மறக்கமுடியவில்லை. அன்றைய நாட்களில் உடனே அந்த பணத்தை திரும்ப ஊழிய ஸ்தாபனத்துக்கு அனுப்ப முடியாத நிலைமையில் அன்று என் நிலை இருந்ததால் தான் அத்தனை **மனஉளைச்சலுக்கும்** நான் ஆளானேன். அது வெறும் சிறிய தொகைத்தான் என்றாலும் **கர்த்தருடைய பணம்** என்ற **குற்றஉணர்ச்சி** என்னை வெகுவாக பாதித்தது. கர்த்தர் உணர்த்தின அந்த பயத்துக்காக தேவனை துதிக்கிறேன். வேதத்தில் கூறியதுபோல **"கர்த்தருக்கு பயப்படுதல் ஆயுளை பெருகப்பண்ணும்"**. நீதி 10:27.

சபை பணத்தை எடுப்பவர்கள், சபை நிலத்தை விற்பவர்கள் இவர்களெல்லாம் தாங்கள் சபைக்கு, திருமண்டலத்துக்காக **நன்மை செய்வதாக** தங்கள் செயலை **நியாயப்படுத்திக் கொள்கிறார்கள். டையோசிஸ் நிலத்தை** அல்லது **சபையின் நிலத்தை** விற்று அதை பணமாக்கி நம் ஆலய தேவைகளுக்குத்தானே திரும்ப அந்த பணத்தை பயன்படுத்துகிறோம். **நாங்கள் பணம் திருடவில்லையே** என்று கூறிக்கொள்கிறார்கள். ஆனால் இவர்கள் **பேரம் பேசும் பணத்தின் தொகை ஒன்று, பத்திரத்தில் அல்லது ஒப்பந்தத்தில்** எழுதும் பணத்தொகை **வேறாக** இருக்கிறதே?. அப்படிப்பட்ட ஒப்பந்தத்துக்காக முன்நின்று பேரம் பேசும் **டையோசிஸ்** அல்லது **ஆலய நிர்வாகிகளுக்கு** கமிஷனாக கொடுத்த தொகையே **கோடிகள் அல்லது லட்சங்கள்** என்று **ஒப்பந்தக்காரரே ஆதாரத்தோடு** என்னிடம் கூறினார். அப்படி கூறியதற்கு ஆதாரம் நிறைய உண்டு. கூட நின்று **சாட்சி கையெழுத்து** போட்டவருக்கும் ஒரு கமிஷன் போகிறது. இப்படி மிக மோசமாக போகிறது. இன்றைய **திருச்சபையும் - திருமண்டலமும்** இந்த விஷயத்தில் CSI யைவிட மிக மோசமான நிலையில் உள்ளது **லூத்தரன் சபைகள்**தான். லூத்தரன் ALC & TELC ஆகிய சபைகளில் பண ஊழல் விவரம் மிக மிகத்துணிகரமானது.

இப்படி மேலே குறிப்பட்ட **கமிஷன் வருமானங்கள் யாவும் டையோசிஸ் பெயரில்உள்ள கடைகளை வாடகைக்கு விடுவதிலும்,லீஸ்சுக்கு விடுவதிலும் இவர்கள் நல்ல கமிஷன்** கிடைப்பதால்தான் **சபை பதவிக்கும், திருமண்டல பதவிக்கும் போட்டா போட்டியும் வெட்டுகுத்து சண்டையும் நீதிமன்ற வழக்குகளுமாக** இப்படி நீளுகிறது பிரச்சனைகள்.

இப்படிப்பட்ட பிரச்சனைகள் CSI & லூத்தரன் சபைகளில் பெருகிவிட்டால் ஆத்மீக வளர்ச்சி எப்படி வரும். அதனால்தான் தன்னையும் தன் ஆத்துமாவையும் காப்பாற்றிக்கொள்ள நல்ல வசன அடிப்படையில் உள்ள சில சபைகளை ஒரு சிலர் அலைந்துக்கொண்டிருக்கிறார்கள். இப்படிப்பட்ட ஊழல் நிலையில் உள்ள சபைகளுக்காக ஜெபிப்போம். வேத வாசகர்களாகிய நீங்களே வேதத்தை வாசித்து தெளிவுபெற கர்த்தர் உங்களுக்கு உதவுவாராக.

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

**கேள்வி :** இந்திய நாட்டில் **அக்கிரமங்கள், அநியாயங்கள்** பெருகிக்கொண்டே போகிறதே!. நீங்கள் (Dr.புஷ்பராஜ்) வசிக்கும் சேலத்திலேயே **பெண் பிள்ளைகள், சிறுமிகள்**

**வண்புணர்ச்சிக்கு** ஆளாகிறார்களே!. இதற்கு காரணம் என்ன?.

இதை எழுதும் நான் வெளி மாவட்டத்தில் டையோசிஸ் ஆபீசில் வேலை செய்கிறேன். எங்கள் டையோசிஸ் நிலையை நீங்களும் என்னைவிட நன்றாக அறிவீர்கள். 7 வருடங்கள் எந்த பிரச்சனையும் இல்லாமல் எங்கள் வாழ்க்கையும் என் வேலையும் நன்றாக இருந்தது. திடீரென்று டையோசிஸ்ஸில் சில மாற்றங்கள் ஏற்பட்டது. **தலைமை** மாறியது. **நிர்வாகிகள்** மாறினர். இப்போதுள்ளவர்களுக்கு நான் டையோசிஸ் ஆப்பீஸில வேலை தொடருவதற்கு இஷ்டமில்லை. அலுவலகத்தில் சீனியரான என்னை **அதிகாரமும் மதிப்பும்** இல்லாத செக்ஷனுக்கு மாற்றிவிட்டார்கள், **என் மனைவியையும்** எந்த காரணமும் கூறாமல் பல மைல்கள் தூரமுள்ள பள்ளிக்கு மாற்றிவிட்டார்கள். நாங்கள் **மனதளவிலும், பணக்கஷ்டத்திலும்** மிகவும் பாதிக்கப்பட்டுள்ளோம். இப்போதெல்லாம் டையோசிஸ் அலுவலகத்தில் யாரும் என்னோடு பழக பயப்படுகிறார்கள். தனிமையாக்கப்பட்டேன். என் நிலை மாற நீங்கள் ஜெபித்து பதில் எழுதுவீர்களா?.

**பதில் :** உங்கள் கடிதத்தில் எழுதிய கேள்விக்கான பதில் வாசகர்களுக்கும் பயன்படும் என்பதற்காக ஜாமக்காரன் பத்திரிக்கையின் வழியாக பதில் தருகிறேன்.

இப்போது இந்தியாவின் நிலையும் **லூத்தரன், CSI சபைகளின்** நிலையையும் ஒரே மாதிரியான வழியில் பயனிக்கிறது. இதற்கெல்லாம் காரணம் **தலைமை** சரியில்லை. **தமிழ்நாடோ மத்திய அரசாங்கமோ, கிறிஸ்தவ சபைகளோ, திருமண்டமோ (டையோசிஸ்)** இவைகளை ஆளுகிறவர்கள் **நிர்வாக தலைவர்கள்** இப்படிப்பட்ட உயர்ந்த நிலையில் உள்ளவர்கள் பல இடங்களில் தகுதியில்லாதவர்களும், **கடவுள் பயம் அற்றவர்களுமாக** இருக்கிறார்கள். இவர்கள் தன் பதவியை காப்பாற்றிக் கொள்ள நினைப்பவர்கள், தாங்கள் நினைத்த காரியம் நடக்க எதை செய்யவும் தயங்க மாட்டார்கள். **தங்கள் காரியம்** சாதிக்க **எந்த எல்லைக்கும் போக தயங்கமாட்டார்கள்** தங்களுக்கு **தடையாக இருப்பவர்களை ஒழிப்பதற்காக தங்கள் மனசாட்சியைகூட** அழித்துக்கொண்டு செயல்படுவார்கள்.

❖ **சங் 12ல் "மனுப்புத்திரரில் சண்டாளர் உயர்ந்திருக்கும்போது, துன்மார்க்கர் எங்கும் சுற்றித்திரிவார்கள்".**

❖ **நீதி 29:12ல் "அதிபதியானவன் பொய்களுக்குச் செவிகொடுத்தால், அவன் ஊழியக்காரர் யாவரும் துன்மார்க்கராவார்கள்".**

மேலே கூறப்பட்ட வசனம்தான் இன்று நம் **இந்திய அரசாங்கத்திலும், தமிழ்நாட்டு அரசாங்கத்திலும், கிறிஸ்தவ சபைகளிலும் டையோசிஸ்களிலும், கிறிஸ்தவ சபைகளிலும் தலைமையில் இருப்பவர்கள்** மூலமாக அப்படியே சம்பவிப்பதாக கண்கூடாக காண்கிறோம். இந்த வசனங்களுக்கு வியாக்கியானம் தேவையில்லை.

தினசரி வடஇந்தியா முதல் தென்இந்தியா வரை கிறிஸ்தவர்கள், கிறிஸ்தவ சபைகள் தாக்கப்படுவது கூடிக்கொண்டே போகிறது. **உத்திரபிரதேசம், ஜார்கண்ட், ராஜஸ்தான், மத்திய பிரதேசம், கர்நாடகா** கடைசியாக நம் **தமிழ்நாடு** வரை இந்த தாக்குதல் கூடிக்கொண்டே போகிறது.

கடந்த சில மாதத்துக்குமுன் **சேலத்திற்கருகே செட்டிப்பட்டி** என்ற இடத்தில் நீண்டகாலமாக சபை நடத்தும் **பாஸ்டர்.ஜோசப்** என்பவரின் சபையில் ஆராதனையை நடத்தவிடாமல் **இந்து முன்னணியினர்** ஆர்ப்பாட்டம் செய்தார்கள். **கலெக்டரிடமும்.,காவல் நிலையத்திலும்** புகார் அளித்தும் அதிகாரிகள் யாரையும் கைது செய்யவில்லை. புகார் ஏற்றுக்கொள்ளப்படவும் இல்லை.

இதே நிலைதான் **சபைக்குள்ளும், டையோசிஸ்குள்ளும்** நடக்கிறது. தலைமையில் **சர்வ அதிகாரம் பெற்றவர், நிர்வாக தலைவர்கள்** லூத்தரன், CSI சபைகளில் இப்படிப்பட்ட **தலைமை பதவியில் மோசமானவர்கள் அமைந்தால்** அவர்களுக்கு கீழுள்ளவர்கள் மூலமாக உங்களை போன்றவர்கள் **கொடுமைப்படுத்தப்படுவார்கள்.** இது அனைத்து இடத்திலும் பரவி காணப்படுகிறது.

**அதேசமயம், நீதி 29:2 "நீதிமான்கள் பெருகினால் ஜனங்கள் மகிழ்வார்கள். துன்மார்க்கர் ஆளும்போதோ ஜனங்கள் தவிப்பார்கள்".**

உங்களுக்காக உங்கள் மனைவிபோல், உங்களைப்போல் பாதிக்கப்பட்டவர்கள் ஏராளம். அனைவருக்காகவும் ஜெபிக்கிறேன். **சோர்ந்துபோக வேண்டாம். எல்லாவற்றிக்கும் ஒரு முடிவு உண்டு** என்று வேதம் கூறுகிறது. அந்த முடிவு வரும்வரை உங்களை பரிசோதித்து உங்கள் தவறை முதலில் கண்டுபிடியுங்கள். கர்த்தரின் **பதில்வரும் இடைவேளையில்** நீங்கள் எந்தெந்த விதத்தில் **கர்த்தரின் மனதை வேதனைப்படுத்தியிருக்கிறீர்கள்.** எந்த வசனத்துக்கு இன்னும் **கீழ்படியாமல் இருக்கிறீர்கள்** என்பதை பரிசோதித்துப் பார்த்து சரிபடுத்திக்கொள்ளுங்கள்.

**"அநியாயம் செய்கிறவன் இன்னும் அநியாயம் செய்யட்டும். அசுத்தமாயிருக்கிறவன் இன்னும் அசுத்தமாய் இருக்கட்டும்.**

**அதே சமயம், நீதியுள்ளவன் இன்னும் நீதி செய்யட்டும் பரிசுத்தமுள்ளவன் இன்னும் பரிசுத்தமாகட்டும்".** வெளி 22:11.

**"இதோ சீக்கிரமாய் வருகிறேன் அவனவனுடைய கிரியைகளின்படி அவனவனுக்கு நான் (இயேசு) அளிக்கும் பலன் என்னோடே கூட வருகிறது".** வெளி 22:12.

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

**கேள்வி :** சகோ.**மோகன் C.லாசரஸ்ஸுக்கும்** -இசை அமைப்பாளர் **இளையராஜாவுக்கும்** என்ன பிரச்சனை- **இளையராஜா ஏன் சகோ. லாசரஸ்சைக்குறித்து** பேசவேண்டும்?

**பதில் :** இளையராஜா, சகோ.மோகன் C.லாசரஸ் பெயரை தன் பேட்டியில் குறிப்பிடவில்லை. **இந்து தேவாலயங்களை சாத்தான் இல்லங்களாக** சித்தரித்து பேசிய செய்திகளை **இந்து முன்னணியினர்** வலைதளங்களில் வெளியிட்டதால் தமிழ்நாட்டில் ஏறக்குறைய 19 இடங்களில் அவர்மேல் **நீதிமன்ற வழக்கு** தொடுத்துள்ளனர். அதன் பாதிப்பு **மலேசியாவிலும்** பிரதிபலித்தது. மலேசியாவில் சில கிறிஸ்தவ சபைகளின்முன் இந்து மதத்தினர்கூடி பேராட்டம் நடத்தியுள்ளனர். அதேபோல் அவர் பிரசங்கத்தை இளையராஜா வலைதளத்தில் கேட்டிருக்கவேண்டும். அதில் **இயேசு மட்டுமே உயிருள்ள தெய்வம்** என்று அவர் பிரசங்கித்ததற்கு சவால்விடும் வண்ணம் வன்மை. இந்து சினிமா ரசிகர்களை திருப்திபடுத்த உலகில் நான் வணங்கும் திருவண்ணாமலை ரமண ரிஷிகள்தான் இன்றும் **உயிரோடு இருக்கிறார்** என்று கூறினார். **ரமண ரிஷி** இறந்து பல ஆண்டுகள் ஆகிறது. சுமார் 50 வருடங்களுக்கு முன் ரமண ரிஷிபற்றியோ அவர் **புதைக்கப்பட்ட கல்லறையைப்பற்றியோ** யாரும் சீண்டியதாக இல்லை.

திடீரென்று இளையராஜா அவர்கள் **ரமண ரிஷி** கல்லறைக்கு **பளிங்கு கற்களால்** கட்டிடம் கட்டி பிரசித்திப்பெற செய்துவிட்டார்.

இளையராஜாவைப்பற்றி இரண்டு நபர்கள் **அவர் வாழ்க்கையைப்பற்றி** எனக்கு அறிவித்தார்கள். அறிவித்த இருவருமே **சினிமா துறையை** சேர்ந்தவர்கள். அதில் ஒருவர் உதவி டைரக்டராக சினிமாவில் பணியாற்றியவர். இளையராஜா அவர்கள் பழைய திரைப்பட இசையமைப்பாளர் **கோவர்தனிடம்** உதவியாளராக இருந்தவர். இவர் முறைப்படி சங்கீதம் கற்றவர் அல்ல. எப்படியோ சொந்த முயற்சியில் முன்னுக்கு வந்தவர் ஆவார். ஆனால் அவரைப்பற்றிய பழைய வாழ்க்கையைப்பற்றி **அறிந்தால்தான் உங்கள் கேள்விக்கு** பதில் சரியாக அமையும்.

**இளையராஜா** அவர்கள் மதுரை மாவட்டம் **பண்ணைபுரம்** ஊரின் அருகில்உள்ள கிராமத்தில் **CSI கிறிஸ்தவ குடும்பத்தில்** பிறந்தவர். **தலித் சமுதாயத்தை** சார்ந்தவர். கிறிஸ்தவ குடும்பத்தில் இவருக்கு இட்ட பெயர் **டேனியல்ராஜா** என்பதாகும். இதைப்பற்றி பல வருடங்களுக்குமுன்பே ஒரு வார பத்திரிக்கையில் குடும்பத்துடன் வெளியிட்டிருந்தார்கள். வறுமை இவர் குடும்பத்தை வாட்டியதால் பிழைப்பு தேடி **சினிமா துறைக்கு** தன் சகோதரர்களுடன் சென்னை வந்தார். மேடை கச்சேரிகள் செய்து சாப்பிட பணம் சம்பாதித்தார்கள். **அன்னக்கிளி** என்ற ஒரே படம் இவரை திரைஉலகில் இசையின் உச்சத்துக்கு கொண்டு போய்விட்டது. தன் குடும்பம் ஆராதித்த தெய்வமான **இயேசுகிறிஸ்துவை** புறம்தள்ளி சினிமா துறையில்உள்ள **பெரும்பான்மை இந்து மக்களை** திருப்திபடுத்த **கிறிஸ்தவன்** என்ற முகத்தை மறைக்க **தீவிர இந்துமத பக்தரானார்**. அப்படியே முற்றும் துறந்த **சன்யாசிபோலவும்** மாறினார்.

இவருடைய மகன் **இஸ்லாமிய மதத்துக்கு** மாறி இஸ்லாமிய **பெண்ணை திருமணம்** செய்துகொண்டது இவர் மனதை பெரிதும் பாதித்தது. அப்போதுதான் எல்லாம் வெறுத்த **சன்னியாசியை** போல் மாறினார். தன் **நிறம் தன் உருவம் தன் கண்கள் யாவும் தான் ஒரு**

**அழகில்லாதவன்** என்கிற **தாழ்வுமனப்பான்மை** இவர் உள்ளத்தில் மறைந்து அவரை வாதித்ததாக சிலர் கூற கேட்டேன். அதனால்அவர் பல காலம் பொது நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ளாமல் தவித்தார்.

அப்போதுதான் தன்னிடம் கீ-போர்டு கிடார் போன்ற கருவிகளை வாசித்த சிறுவன் **AR.ரகுமான்** என்பவர் இவர் குழுவில் சேர்ந்தார். இவரும் **இந்துவிலிருந்து முஸ்லீமாக** மாறியவர். இவருக்கு திடீரென்று சினிமா இசை அமைப்பாளர் வாய்ப்பு கிடைத்தது. அந்த சினிமாவில் **சின்ன சின்ன ஆசை சிறகடிக்கும் ஆசை** என்ற பாட்டிடை இசையமைத்தின் மூலம் சினிமா இசை உலகில் **AR.ரகுமான்** புயலாய் எழுந்தார்.

இவரோடு இளையராஜாவுக்கு போட்டியாக பலர் எழும்பிவிட்டனர். இவர் வியாபாரம் படுத்துவிட்டது. மேலும் கூடுதல் விரக்தியில் தள்ளப்பட்டு தான் ஆராதித்த **இயேசுவின் மேல் கோபமும், வெறுப்பும்** உண்டாக **இயேசு உயிரோடிருக்கிறார்.** அவர் **கல்லறை மட்டுமே காலியானது** என்பதை இவர் அறிந்தும் தொழில் விரக்தியின் காரணமாகவும் **இந்து மக்களை திருப்திப்படுத்தவும்** சில சினிமா படங்களுக்கு தனக்கு வாய்ப்பு வராதா? என்ற எதிர்பார்ப்பில் **ரமண ரிஷி** மட்டுமே உயிரோடு இருக்கிறார் என்று இவர் அவர் கல்லறைமீது அமர்ந்து கொண்டே **டிவிட்டர் மூலமாகவும், மீடியா மூலமாகவும்** செய்தியை கசியவிட்டு தன் பெயர் எல்லாராலும் பேசப்படவேண்டி இவர் கூறியதுதான் இப்போது பிரச்சனையாக பேசப்படுகிறது. அதைப்பற்றித்தான் நீங்களும் கேள்விப்பட்டிருக்கிறீர்கள்.

இன்னொரு விஷயமும் அறிய வேண்டும். சின்ன வயதில் இவர் **கிறிஸ்தவ சபைக்கு** சென்றபோது பாடிய **கிறிஸ்தவ கீர்த்தனைகள்** அவர் மனதில் அப்படியே பதிந்துஇருப்பதால்தான் தன் இசையமைத்த பல பாடல்களில் நம் **கீர்த்தனை ராகங்களை** கலக்கவிட்டிருக்கிறார்.

குறிப்பாக நம் கீர்த்தனைகளில் பாடும் **"ஆனந்தமே ஜெயா ஜெயா அகமகிழ்ந்தனைவரும் பாடிடுவோம்"** என்ற பாட்டின் ஆரம்ப கவிகளின் ராகம் சேர்க்கப்பட்டதை உங்களில் சிலர் அறிந்திருக்கலாம்.

இயேசு **உயிரோடு இருக்கக்கூடாது** என்று பிசாசு செய்த முயற்ச்சிகளை நீங்கள் அறிவீர்கள். இயேசு பிறந்து **இரண்டு வயது குழந்தையாக** இருந்தபோதே கொல்லப்பார்த்தான். வாலிபனாகி பிரசங்கம் செய்யும்போதே **கல்லெரிந்து கொல்ல முயன்றான், தோல்வி அடைந்தான்.** இயேசு மறித்து **கல்லறையிலிருந்து எழக்கூடாது** என்று பெரும்பாறையை போட்டு மூடி சீல் வைத்து காவலர்களை காவல் வைக்க ஏற்பாடுசெய்தானே! அதிலும் அவன் தோற்றுப்போனான்.

**இயேசு உயிரோடு எழும்புவதை யாராலும் தடுக்கமுடியாது.** இந்த இளையராஜாவால் மட்டும் **இயேசுவை இறந்தவராக காட்ட முடியுமா**? **ரமண ரிஷியை** உதாரணம் காட்டினாலும் முடியாது. இவர் **சூரியனை கைகளால் மறைக்க** முயலுகிறார்.

**தன் பிறப்பை தன் குடும்பம்** ஆராதித்த இயேசுகிறிஸ்துவை இவருக்கு **பாட்டு வரத்தை அளித்த இயேசுகிறிஸ்துவுக்கு தன் பொய்யான** அறிவிப்பால் **இயேசுகிறிஸ்துவுக்கு பெருத்த துரோகம் இழைத்துவிட்டார்.** அவருக்காக ஜெபிப்போம். **இளையராஜா அவர்கள் ஒரு நாள் உணர்த்தப்படுவார்** என்று நம்புவோம். ❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

சிந்தனைக்கு...

# வாக்குத்தத்த அட்டைகள் தேவையா?

2019ம் ஆண்டு பிறந்துவிட்டது. பெரும்பாலான **பெந்தேகொஸ்தேவிலும், CSI, லூத்தரன்** சபைகளிலும் டிசம்பர் 31ம் தேதி இரவு பழைய வருட ஆராதனை புதிய வருட ஆராதனை என்று சொல்லி நடத்தி ஆராதனையில் கலந்துக்கொண்ட ஒவ்வொரு விசுவாசிக்கும் ஒரு **வாக்குத்தத்த அட்டையை** கொடுப்பார்கள். வாங்குகிறவர்களும் **இந்த ஒரே ஒரு வாக்குத்தத்தம்தான் இந்த புதிய ஆண்டு முழுவதற்கும் போதும்** என்று நம்பி திருப்தியோடு போவார்கள். வேதத்தில் **ஏராளமான வாக்குத்தத்தங்கள்** தாராளமாய் இருக்க கொடுக்கப்பட்ட அந்த **ஒன்றைமட்டுமே பிடித்துக்கொண்டு** ஆண்டு முழுவதும் **செழிப்பான வாழ்வு** வாழ முடியுமா? சிந்தியுங்கள். நமது 66 புத்தகங்களிலும் சொல்லப்பட்ட அனைத்து வாக்குத்தத்தங்களும் நமக்கு உரியது. அத்தனையும் நமக்கென்று கொள்ளும்போது தேவன் நமக்கு கொடுக்க விரும்புகிற **முழுமையான வாழ்வும்** கிடைக்குமல்லவா.

## வாக்குத்தத்தம் வேறு !

## ஆசீர்வாதம் வேறு ! என்று பலருக்கு புரியவில்லை.

**வாக்குத்தத்த அட்டை** என்று சொல்லி அதில் **ஆசீர்வாத வசனங்களைதான்** பெரும்பாலும் பிரிண்ட் பண்ணுகிறார்கள். **ஆசீர்வாதம் என்பது எப்போதும் நிபந்தனைக்கு உட்பட்டது.** (Conditional) **நீ இதை செய்தால்** உனக்கு இது கிடைக்கும் என்பது வேதத்தின் உபதேசம். **ஆசீர்வாதமும் சாபமும்** நாமே சுதந்தரிக்க வேண்டியவை. (உபா 11:26-28, 30:15,19) உபா. 28ல் இவைகளில் ஒரு சில சொல்லப்பட்டுள்ளன. இஸ்ரேல் மக்களுக்கு **நியாய பிரமான கிரியை** இருந்தாலும் அது **விசுவாசத்தோடு இணைந்திருந்தால்தான்** இந்த ஆசீர்வாதங்கள் அவர்களுக்கு கிடைக்கும். **நமக்கோ இயேசுவின்** உபதேசங்களும் **அப்போஸ்தல** உபதேசங்களும் இணைந்த **விசுவாச கிரியைகளினாலே** மட்டுமே **ஆசீர்வாதம் கிடைக்கும்.** ஆபிரகாமுக்கு கொடுக்கப்பட்ட **ஏழு விதமான** ஆசீர்வாதங்களின் (ஆதி. 12) பெருக்கம்தான் இஸ்ரவேல் மக்களுக்கும் உரித்தானதாகும். **பழைய ஏற்பாட்டில்** சொல்லப்பட்ட அத்தனை ஆசீர்வாதங்களும் கலா 3:7,9, 11ன் படி ஆபிரகாம் வழி வந்த இஸ்ரேலுக்கு உண்டான அத்தனை ஆசீர்வாதங்களும் இப்போது கிறிஸ்துவை ஏற்றுக்கொண்ட **புற ஜாதியரான** நமக்கும் உண்டு. அதுவும் நிபந்தனையோடு மட்டுமே. அதில் சில ஆசீர்வாதங்கள் கண்டிப்பாய் நமக்கும் உண்டு என்று வாக்குத்தத்தமாய் சொல்லப்பட்டிருக்கிறது. அந்திகிறிஸ்துவின் நாளில் இஸ்ரேலுக்கு கிடைக்கப்போகும் ஆசீர்வாதமாவது யோவேல் 2:28ல் சொல்லப்பட்ட **பரிசுத்த ஆவியின் நிறைவை** பெறுகிற ஆசீர்வாதமாகும் அது. சத்தியமாய், வாக்குத்தத்தமாய் (Promise) இரட்சிக்கப்பட்ட **நமக்கும் இப்போதே உண்டு.** (கலா. 3:14) ஆனால் அதே சமயம் வெறுமனே **வாக்குத்தத்தம்** என்பது எந்த நிபந்தனையும் இல்லாமல் தேவன் சொன்னபடியே ஏற்ற வேளையில் அவரே செய்வதாகும்.

புதிய ஏற்பாட்டிலும் யோ. 14ல் சொல்லப்பட்டபடி **தம்முடைய பிள்ளைகளை அழைத்துக்கொண்டுபோக** கண்டிப்பாய் **இரண்டாம் வருகையில் வருவார்.** சபையார் ஒருவர் கூட எடுத்துக்கொள்ளப்பட இல்லாவிட்டாலும் **சொன்ன வாக்குத்தத்ததின்படி இயேசு கண்டிப்பாய்** வருவார். **அவர் சொல்லுகிறதை செய்கிறவர். செய்கிறதை மாத்திரமே சொல்லுகிறவர்.** இதை வாசிக்கும் வாசகர்களே உனக்கு கொடுக்கப்படுகிற **வாக்குத்தத்த அட்டை** அசீர்வாதமா? அது வாக்குத்தத்தம் தானா? என்று முதலில் பார். **ஆசீர்வாதமாக** இருந்தால் ஆசீர்வாத அட்டை என்று சொல். வாக்குத்தத்தமாய் இருந்தால் மட்டுமே அதை வாக்குத்தத்த அட்டை என்று சொல்.

நீ வாங்கப்போகிற வாக்குத்தத்த அட்டையில் எழுதியுள்ள **அந்த ஒரு காரியம்** மட்டும் உன் வாழ்க்கையில் நடந்தால் மட்டும் போதுமா? தேவனின் ஆசீர்வாதங்களையும் வாக்குத்ததங்களையும் நாம் அதிகஅதிகமாய் பெறுவதற்கு இந்த வசனம் ஒன்றை மட்டுமே காட்டி மற்ற ஆசீர்வாதங்களை் பெறாதபடி தடைபண்ணுகிற செயலாக இது இருக்கிறது என்பதை முதலில் தியானித்து செயல்படு. தேவனின் வாக்குத்தத்தங்களை உங்கள் **அறிவால் மட்டுப்படுத்தாதீர்.**

- நன்றி விசுவாச முழக்கம்.

## வாசகர்கள் கவனிக்கவும்:

ஒவ்வொரு மாதமும் குறிப்பிட்ட தேதியில் ஜாமக்காரன் பத்திரிக்கையை அனுப்ப இயலவில்லை. ஊழியம் அதிகமாக இருப்பதினாலும், மலையாள மொழியில் ஜாமக்காரன் பத்திரிக்கையை மொழிபெயர்ப்பதற்காக ஒவ்வொரு மாதமும் நான் கேரளா மாநிலத்துக்கு போய் வர வேண்டியிருப்பதால் ஜாமக்காரனை குறிப்பிட்ட தேதியில் அல்லது வாரத்தில் தபாலில் சேர்க்க முடியவில்லை. எனக்கு மலையாளம் எழுதவோ - படிக்கவோ தெரியாது. மலையாள மொழியில் பிரசங்கம் செய்ய மட்டும் கர்த்தர் எனக்கு கிருபை தந்தார்.

ஆகவே வாசகர்கள் இதை புரிந்துக்கொண்டு ஒவ்வொரு மாதமும், கடைசி வாரம் கடைசி தேதிக்குள் ஜாமக்காரன் உங்கள் விலாசத்துக்கு வந்து சேராவிட்டால் மட்டும் உங்களுக்கு ஜாமக்காரன் கிடைக்கவில்லை என்பதை எனக்கு அறிவிக்கலாம் அல்லது தொலைபேசியில் அறிவிக்கலாம். ஆகவே அந்தந்த மாதம் கடைசி வாரம்வரை கடைசி தேதி வரை பொருமையோடு இருந்து அதன்பிறகு என்னிடம் விசாரிக்கலாம்.

நீங்கள் அறிவிக்காமல் யாருடைய விலாசத்தையும் நாங்கள் நீக்கவேமாட்டோம். உங்களுக்கு அனுப்பப்படும் ஜாமக்காரன் தபால்துறையிலிருந்து எங்களுக்கு திரும்ப வந்தால்மட்டும் உங்கள் விலாசத்தை உடனே நீக்கிவிடுவோம். மறுபடியும் நீங்கள் எங்களுக்கு எழுதி கேட்டால் உங்கள் விலாசத்தை கம்பியூட்டரில் பதிவுசெய்து புதிய நெம்பர் உங்களுக்கு கொடுக்கப்படும். பழைய நெம்பர் கொடுக்கப்படாது. உங்கள் ஒத்துழைப்புக்கு நன்றி.

**- ஜாமக்காரன்**

# அன்றன்றுள்ள ஆகாரத்தை இன்று எங்களுக்கு தாரும்

நம் கிருபைநிறைந்த தெய்வமாகிய **இயேசு கிறிஸ்து** சீஷர்களுக்கு கற்றுக்கொடுத்த **மாதிரி ஜெபம்தான்** தலைப்பில் காண்பது.

என்னுடைய வாழ்க்கையிலும் அது நடைமுறையில் உண்மையானது. கர்த்தர் நான் ஊழியம் தொடங்கிய 1964ம் வருடத்திலிருந்து 2018ம் வருடமாகிய இன்று வரையும், இனிமேலும் கர்த்தர் ஒவ்வொரு மாதமும் என் ஊழிய தேவைகள் என் குடும்ப தேவைகள் பத்திரிகை ஊழிய தேவைகள் யாவையும் சந்தித்து குறையில்லாமல்,மிதமிஞ்சி போகாமலும் சரியாக அளந்து மிக கிருபையாக என்னை போஷித்து வழிநடத்துகிறார்.

2018ம் வருட கடைசியில் வளமையாக என் குடும்பம் மக்களான ஜாமக்காரன் வாசகர்களுக்கு, வருடத்திற்கு **ஒரு முறை என் வருமான கணக்கை** அறிவிப்பது வழக்கம். அதனால் அவர்கள் அனைவரும் என்னோடுகூட சேர்ந்து தேவனை துதிக்க முடிகிறது. வருடங்கள் கூடக்கூட பொருளாதார சூழ்நிலையின் மாற்றத்திலும் எனக்கு உங்களால் வரும் **காணிக்கையின் அளவும்** அதிகமாகிக்கொண்டேப்போகிறது.

பத்திரிகையில் எழுதப்படும் வசன அடிப்படையிலான ஆவிக்குறிய செய்திகளால் எச்சரிப்புகளால் வாசக குடும்பங்களிடையே ஜாமக்காரனை வாசிப்பவர்களின் எண்ணிக்கை **மிக அதிகமாகி கொண்டேபோகிறது. பத்திரிக்கை** வாயிலாகவும் **வெப்சைட் ஆன்லைன்** மூலமாகவும் ஜாமக்காரனை **வாசிப்பவர்களின் எண்ணிக்கை** பல லட்சங்கள் கடந்துவிட்டதை குறித்து தேவனை துதிக்கிறேன்.

கிறிஸ்தவ பத்திரிக்கைகள் நுழைய முடியாத **சவுதி அரேபியா** போன்ற நாட்டில் வேலை விஷயமாக, தொழில் விஷயமாக தங்கியுள்ள குடும்பங்கள் ஜாமக்காரனை வாசிப்பதற்கொன்றே **தொடங்கப்பட்டதுதான் (website) வலைதளம்** ஆகும். வாசகர்கள் வெப்சைட்டில் வெளிவரும் ஜாமக்காரனை PDF மூலமாக காப்பி எடுத்து அதை **புத்தகமாக்கி** நான் நேரில் பாத்திராத பேசி பழக்கமில்லாத பல விசுவாசிகளுக்கு அவர்கள் இலவசமாக ஜாமக்கரனை கொடுத்து, படிக்க செய்கிறார்கள். அதை ஒரு ஊழியமாக செய்கிறார்கள். அப்படி அவர்கள் விநியோகிப்பதை அறிந்து தேவனை துதிக்கிறேன்.

வெளிநாட்டில் வாழும் ஜாமக்காரன் வாசகர்களுக்கு ஜாமக்காரன் புஸ்தகத்தை தபாலில் **அனுப்ப ஒரு புத்தகத்திற்கு குறைந்தபட்சம் 41 ரூபாயும் அதிகபட்சம் 76 ரூபாயும் ஸ்டாப்பு ஒட்டி வான்வழியாக (Air Mail) அனுப்புகிறோம்.**

பல ஆயிரக்கணக்கில் பத்திரிகையை ஒவ்வொரு வாரமும் **தமிழிலும்- மலையாள** பாஷையிலும் ஜாமக்காரன் அச்சிட்டு ஸ்டாம்ப் ஒட்டி தபாலில் சேர்க்க எத்தனை லட்சங்கள் செலவாகிறது என்பதை நிச்சயம் **என் வாசகர்கள் மட்டும்** அறிவார்கள்.

இந்தியாவிற்குள் தபால் மூலம் அனுப்பப்படும் ஜாமக்காரன் (தமிழ் - மலையாளம்) வெளி நாடுகளுக்கு தபால் வழி அனுப்பபடும் பத்திரிகைகளின் எண்ணிக்கை பல லட்சம் கூடிப்போனது. இதற்கெல்லாம் லட்சக்கணக்கில் செலவாகும் பணத்தை **நானோ என் குடும்பமோ** அல்லது வெளிநாட்டு ஸ்தாபனமோ வெள்ளைக்காரர்களோ யாரும் இதுவரை எனக்கு பணம் அனுப்பியதில்லை. நாங்களும் அப்படி **வெள்ளைக்கார ஸ்தாபனங்கள் பணத்தை அனுப்புவரை** இதுவரை எதிர்ப்பார்த்ததில்லை.

அத்தனை லட்சங்களும் **என் ஜாமக்காரன் குடும்பத்தினரே** மாதாமாதம் நான் கேட்காமலே எனக்கு அனுப்பி என்னை கடன்காரனாக ஆக்காமல் பணத்தில் குறை உண்டாகாமல் பார்த்துக் கொள்கிறார்கள். இப்படிப்பட்ட என்னை புரிந்துக்கொண்ட வாசகர்கள் எனக்கு கிடைத்தது கர்த்தரின் பெரும் கிருபையாகும்.

நான் பணத்தைக்குறித்து பத்திரிக்கை **வாயிலாகவோ, ஜாடையாகவோ கேட்டதில்லை. ஜெபித்துக்கொள்ளுங்கள்** என்று கிறிஸ்தவர்கள் உபயோகிக்கும் வார்த்தையின் அர்த்தம் பணம் அனுப்புங்கள் என்பதாகும். அப்படி என்மேல் ஒரு அனுதாப எண்ணம் நான் உபயோகிக்கும் அல்லது எழுதும் வார்த்தையில் உருவாகிவிடக்கூடாதே என்ற பயம் எப்போதும் எனக்குள் உண்டு. இது **ஆண்டவர் கொடுத்த ஊழியம்.** ஆகவே இதை ஆண்டவரே நடத்த வேண்டும். அவரும் **வானத்திலிருந்து பணத்தை கொட்டமாட்டார்.** ஆனால். என் அன்பு வாசக குடும்பங்கள் ஜெபிக்கும்போது அவர்கள் உள்ளத்தில் உணர்த்துவார். அப்படி கர்த்தரால் உணரத்தப்பட்டு எனக்கு **வந்துசேரும் பணத்தால்தான்** இத்தனை பெரிய தொகையை செலவழித்து **என் மலை ஊழியத்தையும், பத்திரிகை ஊழியத்தையும்** வெற்றிகரமாக நிறைவேற்றிக் கொணடிருக்கிறேன்.

இதற்காக என்னை அழைத்து உபயோகிக்கும் என் தெய்வத்தை துதிக்கிறேன். அடுத்து எனக்கு கிடைத்த அருமையான ஜாமக்காரன் வாசக குடும்பங்களுக்காக என் தெய்வமாகிய இயேசு கிறிஸ்துவை துதிக்கிறேன்.

முன்பெல்லாம் **மணி ஆர்டர் (M.O) மூலமாக DD அல்லது செக் (காசோலை) மூலமாக பணம் அனுப்பியவர்கள் இப்போது Online Money Transfer- NEFT** மூலமாக எனக்கு காணிக்கை அனுப்புகிறார்கள். அப்படி அனுப்புபவர்களின் எண்ணிக்கை கூடிக்கொண்டே போகிறது. கர்த்தருக்கு ஸ்தோத்திரம்.

❖ இப்போதைய இந்திய சட்டப்படி வெளிநாட்டு செக்குகளை(Cheques) கையில் எழுதி கையெழுத்திட்டு அனுப்பும் வெளிநாட்டு செக்குகளை **வங்கி** ஏற்றுக்கொள்வதில்லை.

ஆகவே **அமெரிக்கா ஐரேப்பா, ஆஸ்ட்ரேலியா, ஜப்பான், மலேசியா. சிங்கப்பூர், நார்வே ,அயர்லாந்து, நெதர்லாந்து. சுவிட்சர்லேண்டு. டென்மார்க்** இன்னும் பல நாடுகளில் உள்ள இந்தியர்கள் இந்தியாவுக்கு ஜாமக்காரனுக்காக பணம் அனுப்ப **வெஸ்டன் யூனியன் கம்பெனி** மூலம் பணம் அனுப்பி அதற்கான இரகசிய நம்பர் அனுப்பும் பழைய முறையை மாற்றி இந்திய வங்கிளுக்குள்ளேயே **பணமாற்றம் மணி டிராஸ்பர் (NEFT)** செய்வதுபோல் ஒரு ஏற்பாட்டை புதிதாக அறிமுகப்படுத்தியுள்ளனர்.

**வெஸ்டர்ன் யூனியன்** மூலமாய் என் வங்கி என் பெயர்- அக்கவுண்ட் நெம்பர் - என் பெயர் இவைகளை குறிப்பிட்டு வெளிநாட்டு வாசகர்கள் பணம் அளித்தல் அடுத்த 15வது நிமிடம் இந்திய வங்கியில் உள்ள என் அக்கவுண்டுக்கு **பணம்** வந்து சேர்ந்துவிடுகிறது.

## இலங்கை வாசகர்களுக்கு...

இதுவரை உலகில் இலங்கை வாசகர்களிடமிருந்து மட்டும் கடந்த 52 வருடமாக செக் (காசோலை) மூலமாகவோ, DD மூலமாகவோ, எந்த காணிக்கையும் எனக்கு வந்ததில்லை. ஆகவே இலங்கையில் வாழும் ஜாமக்காரன் வாசகர்கள் மேலே நான் குறிப்பிட்டப்படி வெஸ்டர்ன் யூனியன் மூலமாக குறிப்பாக பணமாற்றம் NEFT Money Transfer மூலம் **ஆவியானவர் உங்களை ஏவினால்** உங்கள் காணிக்கைகளை இப்போது தடையில்லாமல் எனக்கு அனுப்பலாம். அனுப்ப இயலாமல்போனாலும் அனுப்பத்தெரியாமல்போனாலும் கவலைவேண்டாம். வளமையாக ஜாமக்காரன் உங்களுக்கு வீடு தேடி வந்து சேரும்.

மலேசியா, சிங்கப்பூர் வாசகர்களுக்கு வெஸ்டர்ன் யூனியன் மூலமாக NEFT முறையை பின்பற்றினால் உங்களுக்கு பணம் அனுப்பும் கமிஷன் மிக மிக குறையும் உங்களுக்கும் அந்த ஒழுங்கு லகுவாக இருக்கும் என்று அறிவிக்கிறேன்.

## என் சொத்து மற்றும் பண வரவு விவரம்:

❖ என் அசையும்- அசையா சொத்துக்களைப்பற்றி பல வருடங்களாக வாசகர்கள் நன்றாக அறிவார்கள். 77 வருடமாக அதே ஓடுகள் வேய்ந்த விட்டில்தான் வசிக்கிறேன். அதே புல்லட் என்ற (Made in England) 1962 மாடல் மோட்டார் சைக்கிள் வாகனத்தைதான் உபயோகிக்கிறன். குடும்பமாக ஆலயத்துக்குப்போக Nano என்ற சிறிய மோட்டார் கார் உபயோகிக்கிறேன்.

**இந்த 2018 டிசம்பர் மாத பத்திரிகையை நவம்பர் 27 ம் தேதி எழுதி அச்சகத்துக்கு அனுப்பும்போது என் வங்கி பாஸ் புக் காப்பி நவம்பர் 20ம் தேதி வரை எடுக்கப்பட்ட பணம் வந்த வரவு தொகையின் கணக்கின் நகல் கீழே காணலாம்.**

சில வருடங்களுக்கு முன் என் வாசகர்களின் வசதிக்காக ஐந்து வங்கிகளில் பண வரவு வைத்திருந்தேன் . ஆனால் அதிகாரிகளின் ஆலேசனைகளின்படி **இரண்டு வங்கிகளில் மட்டுமே பணம் வரவும் - பரிவர்த்தனையும் செய்கிறேன்.**

## STATE BANK OF INDIA (SALEM BRANCH)

भारतीय स्टेट बैंक State Bank of India

Savings Bank Account
CIF No : 80611525258
Account No : 10764116842
Customer Name: DR PUSHPARJ M G E

S/D/W/H/o: MANGALAVADHANI
Address: 89 & 90. MAJEETH STREET.
OLD SURAMANGALAM
SALEM -5. SALEM-TALUK
Phone: 04272387499
Email:
D.O.B. (If Minor):
MOP.: SINGLE
Nom. Reg. No.: 000000219132225

SRIRANGAPALAYAM (SALEM)
11/289. RAMKRISHNA ROAD. SALEM.

Phone: 2312794
Email: SBI.01970@SBI.CO.IN
Branch Code: 1970
Date of Issue: 23/10/2018
23/10/2018 6166512 1970
IFSC: SBIN00 शाखा प्रबंधक
MICR: 6360 Branch Manager
CONTINUATION

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 14.11.18 | Transfer through GCC | | | 2000.00 | 59877.01Cr |
| | TRANSFER FROM Mrs. THILAKA MARAGATHA | | | | |
| 14.11.18 | NEFT*IOBA0001288*IOBAN18318515655*J JOHN | | | 4000.00 | 63877.01Cr |
| Uncl Bal: 0.00 | Clr Bal: 63877.01 Cr:+MOD BAL: 0.00 | | | | |
| 17.11.18 | NEFT*SCBL0036001*LB3670181117011I*MR JON | | | 2000.00 | 65877.01Cr |
| 17.11.18 | NEFT*CITI0000004*CITIN18949769618*JONE S | | | 500.00 | 66377.01Cr |
| 18.11.18 | INB | | | 1000.00 | 67377.01Cr |
| | TRANSFER FROM Mrs. T MERLIN MARGRET | | | | |
| 19.11.18 | 001521943662716190 MoneyTRF TXN #KO 3A57 | | | 1005.00 | 68382.01Cr |
| | TRANSFER FROM Mrs. PARUVATHAM VK | | | | |
| 19.11.18 | INB IMPS832313264309/9841796920/XX0869/T | | | 3000.00 | 71382.01Cr |
| | TRANSFER FROM 897948162096 | | | | |
| 19.11.18 | WDL TFR | | 5.00 | | 71377.01Cr |
| | TRANSFER TO 197761106189 | | | | |
| 19.11.18 | SITHESWARAN/223540670562 | 884524 | 45000.00 | | 26377.01Cr |

**19-11-2018 - 26377.31**

# CANARA BANK (SALEM BRANCH)

केनरा बैंक Canara Bank



NAME AND ADDRESS OF BRANCH:
Salem Suramangalam
CANARA BANK
68, Post Office,Main Road
Suramangalam
SALEM
TAMIL NADU-636005
**IFSC Code:CNRB0001219 MICR Code: 636015005**
Tel No:4272446372 Fax No:1
Email ID:cb1219@canarabank.com

Contact details of Banking Ombuds
The Banking Ombudsman
C/o. RBI
Fort Glacis
Chennai
Chennai-600001
Tel.No.0000/0000
Fax.No.0 Email ID:bochennai@rbi.org.in

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | | 43.032.06 |
| 19/11/2018 | NEFT OW:TMBL-RAD | 204459 | 6962.00 | | |
| 19/11/2018 | NEFT SC | 204459 | 3.00 | | 43.029.06 |
| | IANT OFFSETS-P18 | | | | |
| | 111916458042 | | | | |
| 20/11/2018 | FUNDS TRANSFER F | 907068 | | 1500.00 | 44.529.06 |
| | ROM CHRISTOPHER | | | | |
| | MONI D | | | | |
| 20/11/2018 | NEFT OW: -2 MULT | 204460 | 15812.00 | | 28.717.06 |
| 20/11/2018 | NEFT SC | 204460 | 6.00 | | 28.711.06 |
| | IPLE NEFTS-B1811 | | | | |
| | 2017440728 | | | | |

**20-11-2018 - 28711.06**

BANK ACCOUNT NUMBERS:

Dr. M.G.E. PUSHPARAJ

SALEM -636 005. INDIA

**STATE BANK OF INDIA**(SALEM-1970)

**A/C No: 10764116842**

SWIFT CODE - SBININBB637- 10764116842

IFSC CODE - IFSC SBIN0001970 -10764116842

**CANARA BANK - SALEM**

(SURAMANGALAM BRANCH)

**A/C No: 1219101013622.**

SWIFT CODE - CNRB0001219 -1219101013622.

IFSC CODE - IFSC CNRB0001219- 1219101013622.

இதைத்தவிர **வேறு எந்த வங்கியிலும் எனக்கு பண வரவுவோ பிக்சட் டெபாசிட் எதுவும் இல்லை.**

ஒவ்வொரு வருடமும் இந்திய அரசாங்கத்துக்கு ஆடிட்டர் அவர்கள் மூலமாக என் வரவு - செலவு கணக்குகளை 2018 மார்ச் வரை **பாக்கியில்லாமல்** சமர்பித்து உள்ளேன்.

மேலே காண்பித்த இரண்டு வங்கியிலும் உள்ள (பேலன்ஸ்) மீதி தொகை மிகக்குறைவாக காணப்படுவதை கண்டால் வரும் மாதங்களில் லட்சக்கணக்கில் அச்சகத்துக்கும், ஸ்டாப்புக்கும் இதர செலவுக்கும் எப்படி பணம் செலவழிப்பீர்கள் என்ற கேள்வி உங்களுக்கு வரும். இப்படி ஒவ்வொரு வருடமும் நான் உங்களுக்கு வங்கி கணக்கு காட்டும்போதும் இப்படிப்பட்ட கேள்வி வந்ததை அறிவேன். ஒவ்வொரு வருடமும் அதற்கு பதில் அளித்துள்ளேன். நவம்பர் 19 வரை வங்கி தொகை மிக குறைவாக காணப்பட்டாலும் சில வாரங்களில் ஜனவரி மாத பத்திரிக்கைக்கான பணம் கிடுகிடுவென வந்துசேர்ந்துவிடும். இப்படித்தான் ஒவ்வொரு மாதமும் நான் மிக ஆச்சரியமாக வழிநடத்தப்படுகிறேன். அதற்கேற்றபடி என் வாசகர்கள் எப்படி ஆவியானவரால் உணர்த்தப்படுகிறார்களோ தெரியவில்லை?. நானும் அவர்களிடம் அதைக்குறித்து விசாரித்ததும் இல்லை. அந்தந்த மாதம் குறிப்பிட்ட தேவைக்கான பணத்தின் அளவு முழுவதுமாக குறைவில்லாமல் வந்து சேர்ந்துவிடுகிறது.

இது **கிருபையிலும் மகா கிருபையாகும்.** தேவன் இதுவரை யாரிடமும் பணத்துக்காக **கையேந்தும நிலையை** எனக்கு உண்டாக்கினதுமில்லை!. இதுவரை பண விஷயத்தில் என்னையும் என் குடும்பத்தையும் கர்த்தர் வெட்கப்படுத்தினதுமில்லை. கர்த்தருக்கே மகிமை.

இதைவிட நீங்கள் நம்ப முயடியாத செய்தி என்னவென்றால் ஒவ்வொரு மாதமும் **பணத்தேவைக்காக ஜெபத்தில் கர்த்தரிடம் அறிவித்ததும் இல்லை.** இதை உங்களால் நம்ப

முடிகிறதா? இதுதான் கர்த்தரின் வழி நடத்துதல் ஆகும். கேட்காமல் எப்படி கர்த்தர் கொடுப்பார்? நீங்கள் எழுதுவது உங்களுக்கே ஓவராக தெரியவில்லை? என்று கூட உங்களுக்கு கேட்க தோன்றும். **இதுதான் விசுவாசம்.**

**நாம் வேண்டிக்கொள்வதற்கு முன்பே உங்களுக்கு இன்னது தேவை என்பதை கர்த்தர் அறிந்திருக்கிறார்** என்று வேதம் கூறுகின்றது. இதுதான் விசுவாசம், நம்பிக்கை என்பதாகும்.

❖ நான் இரட்சிக்கப்பட்ட 1964 வருடத்திலிருந்து 1965 பிப்ரவரி வரை பணத்தேவைக்காக அழுதிருக்கிறேன். ஆரம்பத்தில் இரு சக்கர சைக்கிள் வைத்திருந்தேன். **டேனிஸ்பேட்டை ரயில்வே** ஸ்டேஷனிலிருந்து **பெத்தேல் பெல்லோஷிப்** சென்று அங்கிருந்து காடையாம்பட்டி என்ற கிராமத்திலுள்ள என் கிளீனிக் சென்று மறுபடியும் **டேனிஸ்பேட்டை ரயில்வே ஸ்டேஷன்** வரை சைக்கிலேயே மருந்து பெட்டியை வைத்துக்கொண்டு ஸ்டேசன் வந்து ஸ்டேஷன் மாஸ்டர் வீட்டில் வண்டியை நிறுத்திவிட்டு ரயில் ஏறி சேலம் திரும்புவேன்.

பல முறை சைக்கிள் டியூப் முள்ளுகளினால் சைக்கிள் பஞ்சர் ஆகிவிடும். ஒரு புது டியூப் வாங்க பணம் போததே!. வீட்டு செலவுக்கு போதாதே? என் நிலை மட்டும் ஏன் இப்படி தரித்திரமாய் ஆனது. என்று சைக்கிளில் போய்கொண்டிருக்கும்போதே அழுவேன். சில சமயம் புளிய மரத்தடியில் வண்டியை நிறுத்திவிட்டு அழுதுவிட்டு புறப்படுவேன்.

1965 வருடம் ஏப்ரல் மாதம் (அப்போதெல்லாம் தசமபாக உபதேசத்தை நம்புனேன்). ஆகவே வறுமையின் நடுவில் கர்த்தருக்கென்று ஒவ்வொரு நாளும் எனக்கு வரும் வருமானத்திலிருந்து அந்தந்த நாளே கர்த்தரின் பணத்தை தனியாக எடுத்துவைக்க பழகினேன். படிப்படியாக என் நிலை உயர்ந்தது. பண வரவு அதிகமானது. சைக்கிள் வண்டி புல்லட் மோட்டார் சைக்கிளாக மாறியது. வீட்டு உபயோகத்துக்கு(3 வீலர்)பஜாஜ் ஆட்டோ ரிக்ஷா வாங்கி குடும்பத்துக்கு உபயோகித்தோம். ஆட்டோ ரிக்ஷா ஆம்னி மாருதி வேனாக மாறியது. ஆம்னி வேன் மாருதி 800ஆக மாறியது. மாருதி கார் பியட் காராக மாறியது. இவைகள் எதுவும் புதிய வாகனம் அல்ல. எல்லாம் பழைய வண்டிகள்தான்(செக்ன்ட் ஹான்டு கார்கள் ஆகும்) அனேக ஆண்டுகளுக்கு பிறகு பழைய காரை விற்று ஒரு லட்சத்து 25 ரூபாய்க்கு டாடா நனோ என்ற புதிய கார் வாங்க கர்த்தர் கிருபை செய்தார். அதுவும் விலை உயர்ந்த ஆடம்பர கார் வாங்கும் எண்ணமே எங்களுக்குள் எழவே இல்லை. அப்படிப்பட்ட ஆசையும் உண்டாகவில்லை.

இப்படி கிருபையாக வழிநடத்திக்கொண்டிருக்கும் என்னையும் என் உள்ளத்தையும் ஊழியத்தையும் அறிந்த தேவாதி தேவனுக்கு துதி உண்டாவதாக. பண விஷயத்தில் குறிப்பாக காணிக்கை விஷயத்தில் நாம் எவ்வளவு உண்மையாக இருக்கிறோமோ அந்த அளவு கர்த்தரும் நம்மிடம் உண்மையாக இருப்பார்.

**"நான் கர்த்தருக்கு முன்பாக மாத்திரமல்ல மனிதருக்கு முன்பாகவும் யோகியமானவைகளை செய்ய நாடுகிறேன்"** என்று பவுல் கூறியதைபோல நானும் ஊழியத்திலும் வாழ்க்கையிலும் வாழ முயற்ச்சிக்கிறேன். தேவனுக்கே மகிமை உண்டாவதாக.

# முதல் அருட் பொழிவுபெற்ற படுகா ஆயர் மற்றும் படுகா இலக்கியவாணர்

நீலகிரி மாவட்டத்தில் **படுகர்** நடுவில் **கிறிஸ்தவம்** ஆழமாக வேர்கொள்ள கடவுள் பயன்படுத்திய மிக முக்கிய பாத்திரம் **அருட்திரு ஜேக்கப் கணக்கா** அவர்கள் என்றால் அது மிகையாகாது. இவர் நீலகிரி மாவட்டத்தில் **காட்டேரி உறட்டியில்** வாழும் மாதையா கெப்பியம்மா தம்பதியினருக்கு 1847ம் ஆண்டு அக்டோபர் மாதம் பிறந்தார். இவரது பெற்றோர் இவருக்கு **பசவா** என்று பெயர் சூட்டி தாலாட்டி சீராட்டி வளர்த்தனர். அவர் அந்நாட்களில் தம் ஆரம்ப கல்வியை காட்டேறியில் இயங்கி வந்த **Bபாசல் மிஷன்** பள்ளியில் படித்தார். இவர் 1862ம் ஆண்டு ஜுன் மாதம் 22ம் தேதி 15 வயதில் இயேசு கிறிஸ்துவை தம் சொந்த மீட்பராகவும் ஆண்டவராகவும் ஏற்றுக்கொண்டு ஜேக்கப் கணக்கா என்ற புதிய பெயருடன் திருமுழுக்கு பெற்றார். 1869ம் ஆண்டு தம் 22வது வயதில் முதல் **படுக கிறிஸ்தவரான ஆபிரகாம் உராலயா** அவர்களின் இரண்டாம் மகள் **கங்கி** என்ற **மரியாவை** தன் வாழ்க்கை துணையாக கரம் பிடித்தார்.

கடவுளுடைய அழைப்பை பெற்றவுடன் உபதேசியாராக (நற்செய்தியாளராக) பெறுப்பெடுத்திருந்தார். இந்நிலையில் **கோத்தகிரியில் Bபாசல் மிஷனரிதளத்தின்** மிஷனரியான **Rev. ஆதாம் பியூர்** அவர்களின் உதவியாளாக 1867 ஆண்டு முதல் பணியை தொடங்கி பல காலம் **கோத்தகிரி** பகுதியில் இவர்கள் இருவரும் மிக சிறப்பாக ஊழியம் செய்தனர். வெற்றியுள்ள நல்ல நற்செய்தியாளராகவும், இலக்கியவாணராகவும் விளங்கினார்.

இவர் கோத்தகிரியில் மிஷனரியாக பணியாற்றி, அதே சமயத்தில் கோத்தகிரியில் இயங்கிவந்த மிஷனரிகளின் பயிற்சி பள்ளியின் ஆசிரியராகவும் பணியாற்றினார். இவர் அந்நாட்களியலேயே **படுகு, தமிழ், கன்னடம்** மற்றும் ஆங்கில மொழிகளில் நல்ல பாண்டித்துவம் பெற்றிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கதாகும். இவர் படுகு, தமிழ் ஆகிய மொழிகளில் நல்ல அருளுரையாற்றும் திறன் பெற்றிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. இவரே படுகா சமுதாயத்தில் முதல் அபிஷேகம் பெற்ற ஆயராவார்

**ஜேக்கப் கணக்கா** அவர்களின் தனித்தன்மையை உணர்ந்த அந்த நாளைய மிஷனரிகள் இவருக்கு 1887ம் ஆண்டு ஜுலை திங்களில் முழு பட்டம் பெற்ற ஆயராக (திருச்சபையின் குருவானவராக) அருள்திரு **ஜே. நோபிலிக்** அவர்களால் அருட் பொழிவு கொடுக்கப்பட்டார். இவர் நீலகிரி மாவட்டத்தின் பல இடங்களில் நற்செய்தியாளராகவும் அருட்பொழிவுக்கு பின்னர் தேவாலய குரவானவராகும் தம் திருபணியை சிறப்புடன் ஆற்றினார்.

இவர் ஒரு நல்ல கல்வியாளராகவும் கவியேற்றும் திறன்கொண்டவராகவும் விளங்கினார். இவர் இயற்றிய பாடல்கள் இன்று நம்மிடம் இல்லாதிருப்பது மிகவும் வருத்தமளிக்கின்றது. இவர் படுகு மொழிகளில் எத்தனை பாடல்கள் இயற்றினார் என்பது சரியாக நமக்கு தெரியவில்லை. ஆனால் இரு பாடல்களை சிலர் இன்றும் நினைவு கூறுகின்றனர். இருப்பினும் இவரால் இயற்றப்பட்ட சயோன் **தீஉறண்ணுன கதை** (சியோன் குமார்த்தியின் கீதம் ) என்ற சிறப்பான நூல் 1684ம் **ஜான் பணியன்** அவர்களால் இயற்றப்பட்ட **மோட்ச பிரயாணம்** என்ற **ஆங்கில**

புத்தகத்தின் இரண்டாம் பகுதியான **கிறிஸ்யானலின் விண்ணக பயணம்** என்ற நூலினை ஆதரமாக கொண்டது. இதனை **படுக மொழியின் இரட்சன்ய யாத்ரீகம்** என்றால் இது மிகையாகாது என்று எண்ணுகிறேன். இது மட்டுமல்லாது படுக மொழியில் இயற்றப்பட்ட ஒரே காவியம் எனவும் துணிந்து கூறுகின்றேன்.

❖ **மோட்ச பிரயாணம்** என்னும் நூல் தமிழில் உரைநடையில் மொழிபெயர்ப்பு செய்யப்பட்டது. பின்னர் **H.A. கிருஷ்ப்பிள்ளை** அவர்களால் **இரட்சன்ய யாத்ரீகம்** என்ற காவியமாக தமிழில் வெளியிடப்பட்டது. இதில் எதை ஆதாரமாக கொண்டு இந்த அருமையான **சியோன் தீஊறண்ணுன** கதை என்ற படுக காவியத்தை வடிவமைத்தார் என தெரியவில்லை. ஆனால் H.A. கிருஷ்ணபிள்ளை அவர்களால் இயற்றப்பட்ட **இரட்சண்ய யாத்ரீகம்** படித்ததினால் ஏற்பட்ட தாக்கத்தினால் இந்நூலினை படைத்தாரோ என எண்ணத் துணிகிறேன். மிக அழகிய முதல் **படுக கிறிஸ்தவ காவியத்தை** வடித்த பெருமைக்குறியவராவார்.

சியோன் **தீஊறண்ணுன** கதை என்ற படுக காவியத்திற்கு **திரு.கௌடல்** அவர்கள் முன்னுறை எழுதி சிறப்பித்துள்ளார். இந்நூல் 30 பக்கங்களை கொண்டது. இந்நூல் மங்களூர் Bபாசல் அச்சகத்தில் அச்சடிக்கப்பட்டு வெளியிடப்பட்டுள்ளது.

இந்நூல் காலவெள்ளத்தில் கரைந்துப்போனதினால் இன்றைக்கு பிரிட்டிஷ் அருங்காட்சியகத்தில் இதன் **ஒரே ஒரு பிரதி மட்டும்** பாதுகாக்கப்பட்டு வருகிறது.

அருட்திரு. **ஜேக்கப் கணக்கா** அவர்கள் பல பாடல்களை இயற்றி இசையமைத்துள்ளார். ஆனால் அது ஏனோ மக்கள் பயன்பாட்டில் இல்லாமல்போனதாலே என்னவோ அவைகளின் ஒன்றும் இன்றைக்கு (குடும்பத்தில் உள்ளவர்கள் உட்பட) யாருக்கும் தெரியாது. ஆனால் அவரது பாடலில் ஒரு வரி மட்டும் கீழே தரப்படுகிறது.

**"ஆறு கோலு கட்டிலேனா?**
**அக்கி ஆக்கி டிலோ?**
**மூறுக்கோலு கட்டிலேனா**
**மண்டெ கூட்டி அத்தலேனா?**
**பாப்ப நெஞ்சு திருகதோலெ**
**பரிசுத்தவு ஆப்பதில்லே"**

படுகர்கள் சாவில் தேர் செய்வார்கள். அதில் "ஆறுக் கோலு" என்பது மிகவும் உயர்ந்த கோபுர தேர் என்று அர்த்தமாகும்.

இப்பாட்டின் தமிழாக்கத்தை கீழே காணலாம்.

**"ஆறு கோல்களால் தேர் கட்டி பயனென்ன ?**
**வாய்க்கரிசி போட்டு நடனமாடி பயனென்ன?**
**ஒப்பாரி வைத்து அழுதால் பயனென்ன?**
**பாவம் மனந்திரும்புவதில்லை**
**பரிசுத்தமும் அடைவதில்லை"** என்பதாகும்.

ஆயர்கள் 1852ம் ஆண்டு மேதகு ஜார்ஜ் காசமேஜர் அவர்கள் மொழி பெயர்த்த தூய லூக்கா நற்செய்தி நூலினை 1887ம் ஆண்டு அருட்திரு **கிறிஸ்தியானில்லியம் லூட்ஸ்** அவர்கள் திருத்தி மொழிபெயர்த்தபோது அம்மொழி பெயர்ப்பில் இவர் பெரிதும் உதவியாக இருந்தார்.

மேலும் 1902ம் ஆண்டு **"யோனா தீர்க்கரின் நூலினை"** படுக மொழியில் தமிழ் மற்றும் கன்னட எழுத்துக்களைப் பயன்படுத்தி மொழிபெயர்த்தார். இந்நூல் Bாசல் மிஷன் சங்கத்தின் வாயிலாக அச்சிட்டு வெளியிட்டார். இந்நூல் ஒரு பக்கம் **தமிழ் எழுத்துருவும், மறுபக்கம் கன்னட** எழுத்துருக்களையும் கொண்டது.

❖ அருட்திரு. **ஜேக்கப் கணக்கா** அவர்கள் 35 பக்கங்கள் கொண்ட வேதாகம சிறுகதைத் தொகுப்பு ஒன்றினையும் **கன்னட எழுத்துருக்களைப் பயன்படுத்தி** எழுதினார். அதனை 1902ம் ஆண்டு மங்களூர் **Bாசல் மிஷன்** அச்சகத்தில் அச்சிட்டு வெளியிட்டார்.

இவர் 1909ம் ஆண்டு ஓய்வு பெற்றார். திருப்பணி நிறுவனங்கள் அவருக்கு ஓய்வு கொடுத்தாலும் ஆண்டவர் திருப்பணிக்கு ஓய்வு கொடுப்பதில்லை. பணிமூப்பு ஓய்வுக்குப்பின் அருட்திரு.**ஜேக்கப் கணக்கா** அவர்கள் CMS **ஆங்ளிக்கன் திருச்சபையின்** தமிழ் திருட்சபையின் கௌரவ ஆயராக தமது மரணக்காலம் வரைக்கும் திருப்பணியாற்றினார். இவர் தமது 74வது வயதில் 1921ம் ஆண்டு தம்மை மீட்டு இரட்சித்து மிக உயரிய பதவியான இறைப்பணியினை அளித்த **பரமப்பிதாவின் மடியில் இளைப்பாறும்படி** மறுமைக்குள் பிரவேசித்தார்.

**குறிப்பு:** கோத்தகிரி அருகேயுள்ள இரண்டு கிராமங்களில் கிறிஸ்தவர்களாக மாறின குடும்பங்களை அக்கிராம மக்கள் ஒதுக்கிவைத்துள்ளனர். தண்ணீர் எடுக்க அனுமதியில்லை, எந்த உறவினர்களும் கிறிஸ்தவர்களை தங்கள் வீடுகள் சேர்க்க கூடாது என்று கட்டுபாடு அறிவித்தனர். அதனால் படுகா இன கிறிஸ்தவ குடும்பம் என்னிடம் சட்ட ஆலோசனை கேட்டு நான் ஜாமக்காரனில் சில வருடங்களுக்குமுன் எழுதிய சட்ட ஆலோசனைகயையும், நீதிமன்ற தீர்ப்பீன் நகலும் கேட்டார்கள். அவர்களுக்கு அதை உடனே அனுப்பிவிட்டேன். அப்போதுதான் படுக கிறிஸ்தவ சரித்திர விவரம் எழுத வேண்டும் என்ற பாரம் வந்தது.

இன்று இந்த படுக இனத்தை சேர்ந்தவர்கள் உன்னத நிலையில் படிப்பில் நாகரீகத்தில் வளர்ந்துள்ளனர். இப்போது கோயமுத்தூர் சிஎஸ்ஐ டையோசிஸ் **பிஷப்.தீமோத்யு ரவீந்தர்** அவர்கள் படுக இனத்தை சேர்ந்தவர். மிகவும் அதிகம் **படித்த பிஷப்பும்** ஆவார். ஆயர்கள் அநேகம் பேர் படுக இனத்தில் வந்து ஊழியம் செய்கின்றனர். படுக இன மக்களுக்காகவே எழுதப்பட்ட கட்டுரையாகும். - நன்றி: Rev.Prof.தேவராஜ் கூடலூர். நீலகிரி மாவட்டம்.

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

ஜாமக்காரன் வாசக குடும்பங்கள்
ஒவ்வொருவருக்கும் எங்களது மனமார்ந்த

# கிறிஸ்மஸ் & புத்தாண்டு 2019

**நல்வாழ்த்துக்கள்.**

**டாக்டர்.புஷ்பராஜ் மற்றும் குடும்பத்தினர்.**

# கடைசி கால எச்சரிப்பு..........

நீங்கள் நினையாத நாழிகையிலே மனுஷகுமாரன் வருவார்: ஆதலால் நீங்களும் ஆயத்தமாயிருங்கள்

கடைசி நாட்களில் அநேகர் வேறுவிதமாய் நடக்கிறார்கள்

அவர்கள் கிறிஸ்துவின் சிலுவை உபதேசத்துக்கு பகைஞர்
அவர்களுடைய முடிவு அழிவு அவர்களுடைய தேவன் வயிறு
அவர்களுடைய மகிமை அவர்களுடைய இலச்சையே.
அவர்கள் பூமிக்கடுத்தவைகளை சிந்திக்கிறார்கள்" பிலி. 3:18,19

அநியாயஞ்செய்கிறவன் இன்னும் அநியாயஞ் செய்யட்டும், அசுத்தமாயிருக்கிறவன் இன்னும் அசுத்தமாயிருக்கட்டும் நீதியுள்ளவன் இன்னும் நீதி செய்யட்டும். பரிசுத்தமுள்ளவன் இன்னும் பரிசுத்தமாகட்டும்

இதே சீக்கிரமாய் வருகிறேன்... அவனவனுடைய கிரியைகளின்படி அவனவனுக்கு நான் அளிக்கும் பலன் என்னோட கூட வருகிறது. வெளி 22:11,12

DECEMBER 2018

# Printed Book (Periodical)


**RNI Reg. No. TNBIL/2016/70171**

**Annual Subscription:**
**India - Rs.60/**
**Foreign - Rs.600/**


**Return Requested:**


**Dr.PUSHPARAJ**
**SALEM - 636 005**
**INDIA.**



Printed at P.M.Press,168,Arumuga Nagar, Salem-636 015
Edited & Published by **Dr.Pushparaj,** 89.Majeeth Street,
Old Suramangalam, Salem - 636 005. Tamil Nadu.INDIA.